மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 8 / ஆகஸ்ட் 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-



# கலைஞர்

## பன்முக ஆற்றலின் அடையாளம்



இ - மெயிலை கண்டுபிடித்த தமிழர் மீது இனவெறி தாக்குதல்



இந்தியாவின் முதல் விடுதலை வீரர் மன்னர் வீர அழகு முத்துகோன்


விரைவில் AUDIO & TRAILOR
VAIDOORYA FILM INTERNATIONAL
A.SUNDARA PANDIAN
presents
உண்மை காதல்
விஜய் N ஜீவா
கிச்சாஸ் | பிரம்மஸ்ரீரவி | சதீஸ் | விக்னேஷ்Nசாம்ராஜ் | யுகபாரதி
A.C.ஜான்பீட்டர் | சஞ்சீவ் ஸ்ரீநிவாஸ் | கமல்.G | ஜெய்குமார் | மோகன் | சீனு | AR.சரண்சன்முகம் | N.பிரபு
தயாரிப்பு - A.சுந்தரபாண்டியன் | விஜய் N.ஜீவா

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly August 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை– 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

எம் தந்தையின் தலைவர் – தலையங்கம்........ 4

அமெரிக்க தேர்தலில் போட்டியிடுவதால் ஆத்திரம்
இ – மெயிலை கண்டு பிடித்த தமிழர் மீது இனவெறி தாக்குதல்........ 6

நடவடிக்கை எடுக்குமா அரசு?
– சைதை மணிமாறன்........ 7

மெரினா கடற்கரையில் தொல்காப்பியருக்கு சிலை வைக்கப்படும்
அமைச்சர் பாண்டியராஜன் ........8

இந்தியாவுக்குப் பொதுமொழி எதுவாகலாம்?
பீமபெருமாள்........ 9

மொங்கு (சிறுகதை) – இருங்கோவேள்........ 12

அரியானா மாநில மடாதிபதி கைது ........15

பசுக்களை கடத்தியதாக கருதி
வாலிபர் அடித்துக் கொலை........ 16

விவேக சிந்தாமணி ( நூல் பார்வை)
–பீம. பெருமாள்........ 17

இந்திய நாட்டை உருவாக்கியவர் முஸ்லிம்களே ........18

உயிரைக் கொடுத்து எதிர்ப்போம்
– ஜெகத் கஸ்பர் முழக்கம்........ 21

உலகை ஆளும் தமிழ்
– வா.மு. சே. திருவள்ளுவர் ........24

கோபத்தை விடவும் கொடியது
விழிப்புணர்வின்மை........ 27

மதுரை பெண்விமானி........ 28

இந்தியாவின் முதல் விடுதலை வீரர் மன்னர் வீர அழகு முத்துக்கோன்
–சுபாஷ்சேர்வை யாதவ் ........30

ஒப்புரவு அறிதல்
திருவள்ளுவர் அளித்துள்ள விளக்கம்........ 32

அசாமில் வெளியார் கணக்கெடுப்பு
தமிழ்நாட்டிலும் வேண்டும் ........34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# எம் தந்தையின் தலைவர்



எம் தந்தையின் தலைவர் கலைஞர். எனக்கு விபரம் தெரிந்த நாளில் இருந்து எனது பள்ளிப் பருவம் நிறைவுறும் வரை முரசொலியை தொடர்ந்து படித்திருக்கிறேன். அதன் பயனாக ஓரளவிற்கு பிழையின்றி எழுதவும் வாக்கியங்களை சிறப்பாக அமைக்கவும் கற்றுக் கொண்டேன் என்பதுதான் உண்மை.

மிசா காலத்தில் முரசொலியைப் பார்க்கவும் இல்லை, படிக்கவும் இல்லை. காரணம் எங்களது தகப்பனார் சிறையில் இருந்தார்கள். அந்நேரத்தில் வீட்டில் ஏற்பட்ட துன்பம் தி.மு.க.வை வெறுக்கத் தூண்டியது. ஆனால் அப்பா வெளிவந்ததும் அவையெல்லாம் மறைந்து போய்விட்டன.

எனது முதல் மேடைப் பேச்சும்கூட கலைஞரால்தான் நடந்தேறியது. அப்பா எடுத்து வைத்திருந்த 1969 ஆண்டு பெப்ருவரி மாத முரசொலியில் கலைஞர் வடித்திருந்த “எம் அண்ணா இதய மன்னா பூவிதழினும் மென்மையான புனித உள்ளம் அன்பு உள்ளம்“ என்ற அண்ணா மறைவிற்கு கலைஞர் எழுதிய இரங்கல் பா தான் என்னை மேடையேற்றியது. எங்கள் ஊரில் நடக்கும் திமுக கூட்டங்களில் பேச்சாளர்கள் பேசும் முன்பு நான் கவிதையைச் சொல்லியிருக்கிறேன். தேர்தல் காலங்களில் ஒலிபெருக்கிகளில் எனது குரலும் ஒலிக்கும்! வாக்கும் கேட்போம்! கலைஞரின் கவிதைகளையும் சொல்லுவோம். கலைஞர் எனது இளமைக் காலத்தை ஆக்கிரமித்திருந்தார்.

உயர்நிலைப் பள்ளிக்குச் சென்ற பின் நூலகத்துக்கு பொறுப்பாளராக இருந்த பால் என்ற ஆசிரியர் எனக்கு மட்டும் கலைஞர் எழுதிய நெஞ்சுக்கு நீதி, அவர் எழுதிய பிற புத்தகங்களைத்தான் படிக்கக் கொடுப்பார். மற்ற மாணவர்கள் எல்லாம் அவர்கள் விருப்பதற்கு புத்தகங்களை எடுத்துக் கொள்வார்கள். எனது தந்தை எங்கள் ஊர்ப்பகுதிகளில் அனைவருக்கும் தெரிந்த திமுக காரர் என்பதால் நானே புத்தகம் தேர்ந்தெடுக்கும் உரிமை கூட இல்லாது போனேன் என்றாலும் கலைஞரின் புத்தகத்தைப் படிப்பதினால் மற்ற மாணவர்களைவிட நான் உயர்ந்தவன் என்று நினைத்தேன். எனது நண்பர்களும் அப்படித்தான் நினைத்தார்கள் கலைஞரின் புத்தகம் என் கையில் இருந்தால் என்னை மரியாதையாகப் பார்ப்பார்கள். அந்த நிலை எனக்கும் பிடித்திருந்தது.

வாசிக்கும் ஆர்வம் இன்றுவரை எனக்கு குறையவே இல்லை. இந்தப் புத்தகம்தான் படிக்க வேண்டும் என்பது இல்லாது கிடைக்கும் புத்தகங்கள் எல்லாவற்றையும் படிப்பது என்ற எனது பழக்கத்தக்குக் காரணம் இரவில் படிக்கும் எங்கள் அப்பா, அம்மாவின் வாசிப்புப் பழக்கமும் கலைஞரின் எழுத்தோவியங்களும்தான்.

ஒருமுறை முரசொலியில் ஒரு அறிவிப்பு வந்தது. ஒரு புத்தகத்தின் பெயரைக் குறிப்பிட்டு, இப்புத்தகம் யாரிடமாவது இருந்தால் எனக்கு அனுப்புங்கள் என்ற கலைஞரின் அறிவிப்பு அது. கலைஞர் கேட்ட புத்தகத்தை எங்களது தகப்பானர் வைத்திருந்தார்கள். அறிவிப்பு வந்த அடுத்தநாள் அப்புத்தகத்தை கலைஞருக்கு எங்கள் தந்தையார் அனுப்பி வைத்தார்கள்.

தந்தை ஜகத் கஸ்பார்ராஜ் அவர்கள் வழி நடத்துதலில் சென்னை சங்கமம் நிகழ்வுகளில் பணி செய்த காலங்கள் என்னால் மறக்க முடியாதவை. கலைஞரை அருகிருந்து கண்டு மகிழ்ந்த நாட்கள் அவை. கிறித்தவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர் இனிகோ இருதயராஜ் அவர்கள் என்னையும் எனது அண்ணன் வளையாபதி அவர்களையும் கலைஞருக்கு அறிமுகம் செய்து வைத்தார். கலைஞர் அவர்கள் எங்கள் வீட்டில் உள்ள தமிழ்ப்பெயர்களை எல்லாம் கேட்டு மகிழ்ந்தார். அப்போது எங்கள் அப்பா, அம்மாவின் 1961ஆம் ஆண்டின் திமுக உறுப்பினர் அட்டையை நான் காண்பித்தேன், அதை வாங்கிப் பார்த்து “அண்ணா கையெழுத்துப் போட்டிருக்கிறார்“ என்று சொல்லி மகிழ்ந்தார்.

இலக்கியத் தளத்தில் முத் தமிழறிஞர் கலைஞரின் பங்களிப்பு என்பது வியக்கத் தக்கதாகும். அரசியல் தளத்தில் அவரது சாத னைகளை முறிய டிப்ப தற்கு இதுவரை யாரும் இல்லை.

இனிமேலும் யாரும் வரப்போவதும் இல்லை. பல சமுதாயங்கள் முன்னேறியிருக்கின்றன என்பதற்கு அவரும் ஒரு காரணம். பல முற்போக்கான திட்டங் களை செயல்படுத்திக் காட்டியவர். என்றுமே பகுத்தறி வுக் கொள்கையில் இருந்து விலகாதவர். யாருக்கும் வாய்க்காத நினைவாற்றலும், நகைச்சுவையுணர்வும் பெற்றவர். எல்லா சாதி, சமய மக்களையும் மாந்தர்கள் என்ற நிலையில் வைத்துப் பார்த்தவர் கலைஞர்.

எல்லாவற்றிற்கும் மேலாக பதினான்காம் வயதிலேயே தனது கையாலேயே கருத்துகளை எழுதி பத்திரிகை நடத்திய சிறந்த இதழியலாளர். தலைசிறந்த பத்திரிகையாளராகிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுகளை முற்றம் இதழ் போற்று கிறது.

**ஆசிரியர்**.

**இலக்கியத் தளத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் பங்களிப்பு என்பது வியக்கத்தக்கதாகும். அரசியல் தளத்தில் அவரது சாதனைகளை முறியடிப்பதற்கு இதுவரை யாரும் இல்லை.**



## அமெரிக்க தேர்தலில் போட்டியிடுவதால் ஆத்திரம்

# இ-மெயிலை கண்டுபிடித்த தமிழர் மீது இனவெறி தாக்குதல்

**அமெரிக்க தேர்தலில் தமிழர்...**

அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையின் மொத்த இடங்களான 435 இடிங்களுக்கும், செனட் சபையின் 100 இடங்களில் 35 இடங்களுக்கும் நவம்பர் மாதம் 6ஆம் தேதி தேர்தல் நடக்க உள்ளது.

இந்தத் தேர்தலில் மசாசூசெட்ஸ் மாகாணத்தில் இருந்து செனட் சபைக்கு சுயேச்சை வேட்பாளரராக போட்டியிட இருப்பவர், சிவா அய்யாத்துரை (வயது 54). தமிழரான இவர்தான் இமெயிலை கண்டு பிடித்தார். விஞ்ஞானியான இவர் வெளிப்படையாக விமர்சிக்கிற வழக்கத்தை கொண்டு உள்ளார்.

**தாக்குதல்**

இவர் மசாசூசெட்ஸ் மாகாணத்தில் இருந்து தற்போது செனட் சபை எம்.பியாக உள்ள ஜனநாயக கட்சி பிரமுகர் எலிசபெத்வாரனை எதிர்த்து போட்டியிடுகிறார். இவர் அங்கு மிகுந்த செல்வாக்கு உடையவர்.



இந்த நிலையில் சிவா அய்யாத்துரை கிரேட் பேரிங்டன் என்ற இடத்தில் உள்ள நகர் மன்றத்தின் வெளியே கையில் ஒலி பெருக்கியுடன் நின்று கொண்டு இருந்தார். அங்கு எலிசபெத்வாரனும் வர இருந்தார். அவருக்காக அவரது ஆதரவாளர்கள் குவிந்து இருந்தனர். இந்த நியைில் சிவா அய்யாத்துரையை பார்த்ததும் அமெரிக்கர் ஒருவர் ஆத்திரத்தில் வந்து அவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். மேலும், அவரது முகத்தில் குத்து விட்டார். இதில் அவரது முகத்தில் ரத்தம் வந்தது.

சிவா அய்யாத்துரையை தாக்கிய நபர் அணிந்திருந்த டி சர்ட்டில் அவர் எலிசபெத்வாரனின் ஆதரவாளர் என காட்டுகிற ஸ்டிக்கர் இருந்தது. இது குறித்து பாஸ்டன்.காம் இணையதளம் செய்தி வெளியிட்டு உள்ளது.

சிவா அய்யாத்துரையும் தான் தாக்கப்பட்டது குறித்து டுவிட்டரில் வேதனையுடன் குறிப்பிட்டு உள்ளார். அதில் அவர், “நான் வாரன் ஆதரவு இன வெறியாளரின் தாக்குதலுக்கு ஆளானேன். வெள்ளை மேலாதிக்கவாதிகள் இப்படி நடந்து கொள்கிறார்கள். கருப்பு நிறம் கொண்டவர்களை அவர்களால் தாங்கக் கொள்ள முடியவில்லை“ என குறிப்பிட்டு உள்ளார்.

இந்த தாக்குதலை நடத்திய நபரின் பெயர் சோலோவாய் ஆகும். 74 வயதான அவர் உடனடியாக கைது செய்யப்பட்டார். அவர் மீது தெற்கு பெர்க்ஷயர் மாவட்ட கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அங்கு அவர் தன் மீதான குற்றச் சாட்டை மறுத்தார். பின்னர் அவர் சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

# நடவடிக்கை எடுக்குமா அரசு?

கடந்த மாதம் தொடர்வண்டியில் பயணம் செய்தவர்கள் தாமஸ் மவுண்ட் அருகே தடுப்புச் சுவரில் இடிபட்டு இரண்டு பேர் பலியான செய்தி பலரை வருத்தத்திற்குள்ளாக்கியது. தொடர்வண்டி செல்லுகிற பாதையின் அருகிலேயே தேவையான இடைவெளி இல்லாது கட்டப்பட்டிருக்கும் சுவரால் இது நடந்துள்ளது.

கடற்கரையிலிருந்து தாம்பரம் செல்லும் தொடர் வண்டிகளில் யாரும் அடிபடுவதில்லை. காரணம் வண்டியில் ஏறி இறங்கும் பாதை அகலமானது. ஆனால் கடற்கரையில் இருந்து செங்கல்பட்டு செல்லும் வண்டிகளில் ஏறி இறங்கும் பாதை மிகவும் குறுகலானது. ஆகவே படிகளில் நின்று பயணம் செய்வோர் கதவுகளை பிடித்துத் தொங்கிக் கொண்டு பயணம் செய்வோர் காயம் அடைகிறார்கள், சிலர் இறந்தும் விடுகிறார்கள். இம்மாதிரியான விபத்துகளை நடவாமல் இருக்க தொடர்வண்டிகளை அதிகப்படுத்த வேண்டும். அல்லது பெட்டிகளை யாவது சிலவற்றை இணைத்திடல் வேண்டும்.

மாநகரப் பேருந்துகளிலும் இதுபோன்ற விபத்துகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு பேருந்து களின் நிலை என்ன என்பது நன்றாகத் தெரியும். சரியாக இல்லை என்று தெரிந்தும் இயக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். தனியார் வண்டிகள் அனைத்திற்கும் எஃப் சி என்ற ஒரு வண்டியை ஓட்டலாம் என்ற உறுதிப்பாட்டை கொடுக்க, சோதனை களைச் செய்யும் அதிகாரிகள், அரசு பேருந்துகளுக்கு எஃப் சி யை நடைமுறைப் படுத்துகிறார்களா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. ஆண்டுக்கொருமுறை அதைச் சரியாகச் செய்திருந்தால் விபத் துகள் பெருமளவில் குறையும். (ஐயப்பன் தாங்கல் பேருந்தின் நிலையை இணைக் கப்பட்டுள்ள படத்தில் பாருங்கள். போரூருக்கு முன்பு பேருந்து சென்று கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்) சாலைகளின் பராமரிப்பு என்பது மிக முக்கியமான ஒன்று. மின்சாரத்துறை, தொலைபேசித் துறை, கழிநீர் அகற்றும் துறை இப்படி எல்லோரும் சாலைகளை வெட்டி தங்களுக்குத் தேவையான பணிகளைச் செய்துவிட்டு, மெத்தனமாக அப்படியே விட்டுவிட்டுப் போவதால் விபத்துகளும் ஏற்படு கின்றன, நேர விரயமும் ஏற்படுகிறது, எரிபொருள் வீணாவதும் நடக்கிறது.

அரசுக் கட்டடங்களும் இப்படித்தான், ஒழுங்கான பராமரிப்பு இல்லாமல், அரசமரமும் ஆலமரமும் கட்டடத்தில் முளைக்கின்றன. மாடிப்படி ஓரங்களில் பான்பராக் எச்சில்கள் அருவெறுக்கத்தக்க வகையில் உமிழப்பட்டுக் கிடக்கிறது. பராமரிப்பு இல்லாத கட்டடங்கள் வாழ்வுக்காலம் மிகக் குறுகிய காலத்தில் முடிந்து விடுகிறது.

மக்களின் வரிப்பணம் இப்படி யெல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்குமா அரசு?

**சைதை மணிமாறன்**



சைதை மணிமாறன்

# மெரினா கடற்கரையில் தொல்காப்பியருக்கு சிலை வைக்கப்படும்

## அமைச்சர் பாண்டியராஜன்

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் பாண்டியராஜன் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழ் பண்பாட்டு மையம் மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் 2 லட்சம் மாணவர்களை ஒருங்கிணைக்க முடியும் என நம்புகிறேன்.


இதற்காக தமிழ் பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பு களை மேம்படுத்த முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி ரூ.16 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் இப்பல்கலைக்கழகத்தில் அகராதி சார்ந்த இணைச் சொல், எதிர்சொல், சொல்செயலி போன்றவற்றை ஒருங்கிணைக்கும் விதமாக சொற்குவை திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வு இருக்கை இயங்கத் தொடங்கிவிட்டது. இதேபோல ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், ஜோகனஸ்பர்க் பல்கலைக்கழகம், மலேசியப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் இந்த ஆண்டு தமிழ் ஆய்வு இருக்கை தொடங்கப்பட உள்ளது.

தமிழின் தொன்மையை உலகத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டுவதற்காக யுனெஸ்கோவின் உலக புத்தகம் என்ற அங்கீகாரத்தை திருக்குறளுக்கு பெற்றுத் தர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தமிழில் ஆய்வு மாணவர்களை ஒருங்கிணைக்கும் வகையில் தமிழ் இணையவாசல் உருவாக்கப்பட உள்ளது. தமிழுக்கு 63 மாநில அரசு விருதுகளும், 8 மத்திய அரசு விருது களும் வழங்கப்பட்டு வருகிறது

தொல்காப்பியருக்கு சென்னை மெரினா கடற்கரையில் சிலை வைக்கப்படும். தமிழ் பல்கலைக் கழகத்தை உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் முதல் 100 இடங்களுக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.



# இந்தியாவுக்குப் பொதுமொழி எதுவாகலாம்..?

மேற்கண்ட தலைப்பில் கல்லூரியில் கட்டுரை வரையுமாறு மாணவர்களுக்குப் பணிக்கப்பட்டது.

அதற்கான விடையை கட்டுரையில் கீழ்க்கண்ட வாறு விடை பகர்ந்தார். ஆட்சி சொற்காவலர் கீ. இராமலிங்கனார்.

“இந்திய மொழிகள் எல்லாம் இரண்டு தலைப்பின் கீழ் வருவன. ஒன்று தமிழ் மொழி, மற்றொன்று வடநாட்டு மொழி. முதல் பிரிவுக்குத் தலைமை தமிழ், இரண்டாவதற்குத் தலைமை சமத்கிருதம். இவ்விரு தலைமை மொழிகளுள் ஒன்று நாட்டின் பொது மொழியாக இருக்க வேண்டும். அதுவே பொருத்தம். அடுத்து சமத்கிருதம் பேச்சு வழக்கொழிந்து நாட்டு மக்கள் பலராலும் ஒலிப்பதற்குரிய எளிய மொழியாய் இல்லை. தமிழ்மொழியோ, இனிமையானது, எவரும் எளிதில் பயிலக்கூடியது, அதனால் அதுவே நம் நாட்டின் பொது மொழியாக விளங்கும் தகுதியு டையது“.

அதன்மீது ஆசிரியர் எழுதிய குறிப்பு “impracticable” என்பது கொண்ட கருத்தினைத் தக்க ஏதுக்களால் நிலை நிறுத்தும் முறையில் கட்டுரை எழுதுவதில் இருக்கும் திறமையைப் பாராட்டாமல் தம் “கருத்தைப்பற்றி இக்குறிப்பு எழுதியிருந்தார் தமிழாசிரியர் இராகவாச்சாரியார்.

“ஒரு மொழியில் கட்டுரை வரையும் போது அம்மொழிச் சொற்களே விரவிவர எழுதவேண்டும்: அதனால், அம்மொழியின் இயல்பு கெடாமல் இலங்கும்“ என்னும் உண்மையை அவர் ஏனோ உணரவில்லை!

“இஃது ஒரு கட்டுரை மட்டுமேயன்றி, வினாவுக்கு விடை அன்று என்பதை மறந்தார்.

மேலும் கட்டுரை ஒன்றன்மீது “you purposely avoid Sanskrit words” என்று குறிப்பெழுதினார்.

*“ஆதாரம் : என்வரலாறு நூலில், பக்கம் 42,43 ஆட்சிச் சொற்காவலர் கீ. இராமலிங்கனார் பதிவு செய்திருக்கிறார்.*


தொகுத்தவர்,

**பீமபெருமாள்,**

அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம்,


அண்ணாநகர், சென்னை 600 040.

பேசி : 95009 30460




க. அருணபாரதி

# தெலுங்கில் பெயர்ப்பலகை இல்லையெனில்
# ரூபாய் 50 ஆயிரம் தண்டம்
## ஆந்திர அரசின் புதிய ஆணையம்



கன்னடமொழி - இன வளர்ச்சிக்காக, கர்நாடகத்தில் 1988ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட சரோஜினி மகிசி அறிக்கையின் அடிப்படையில் "கன்னட வளர்ச்சி ஆணையம்" உருவாக்கப்பட்டு,மண்ணின் மைந்தர்க ளுக்கே வேலை, கன்னட மொழி வளர்ச்சி ஆகியவற்றை முன்வைத்து செயல்பட்டு வருவதை அறிவோம். தற்போது, அதேபோல ஆந்திராவில் "தெலுங்கு மொழி வளர்ச்சி ஆணையம்" (Telugu Language Development Authority) என்ற புதிய அமைப்பை ஆந்திர அரசு உருவாக்கி யுள்ளது.

அரசின் பொது நிர்வாகம், சட்டம், தொழிலாளர் நலன், மொழி வளர்ச்சி, பண்பாடு, கல்வி ஆகிய துறை களின் முதன்மைச் செயலாளர்களைக் கொண்ட அதிகாரம் பெற்றக் குழுவாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 10.07.2018 அன்று உருவான இந்த புதிய ஆணையத்தின் முதல் நடவடிக்கையாக, மாநிலத்திலுள்ள அனைத்து தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகை களிலும் தெலுங்கு மொழியில்தான் எழுத வேண்டும் என்றும் அவ்வாறு எழுதாத நிறுவனங்களுக்கு 50,000 ரூபாய் வரை தண்டத் தொகையும், ஆறு மாத கால சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதேபோல், அரசு விழாக்களின் கல்வெட்டுகளில் தெலுங்கு இடம்பெறவில்லை எனில் அதற்குப் பொறுப்பான அரசு அதிகாரிக்கு 10,000 ரூபாய் தண்டத் தொகை விதிக்கப்படும் என்றும், அலுவலக அறிவிப்புகள் மற்றும் பொது அறிவிப்புகள் தெலுங்கு மொழியில் இல்லையெனில் அதற்குப் பொறுப்பான அரசு அதிகாரிக்கு 5,000 ரூபாய் தண்டத் தொகை விதிக்கப்படும் என்றும், தெலுங்கு மொழியை அலுவல் மொழியாகப் பயன் படுத்தாத அரசு ஊழியருக்கு 10,000 ரூபாய் தண்டத் தொகை விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு மொழியைக் கட்டாய மொழிப் பாடமாகப் பயிற்றுவிக்காத கல்வி நிறுவன உரிமையாளர்க்கு 50,000 ரூபாய் தண்டத் தொகை அல்லது ஆறு மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

ஏற்கெனவே, கடந்த 2017 ஆகத்து மாதத்தில், கர்நாடகத்தின் கன்னட வளர்ச்சி ஆணையம் கன்னடப் பெயர்ப் பலகை இல்லாத நிறுவனங்களின் உரிமம் இரத்து செய்யப்படும் என அறிவித்தது, குறிப்பிடத்தக்க செய்தி!


இச்சூழலில், 30.07.2018 அன்று முதல் கர்நாடகத் தலைநகர் பெங்களூருவிலுள்ள கடைகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள் அனைத்திலும் கட்டாயமாக கன்னடத்தில் எழுதியிருக்க வேண்டும் என மாநகராட்சி அறிவிப்பு வெளியிட்டதுடன், அவற்றைச் செய்யாத நிறுவனங்களின் உரிமம் திரும்பப் பெறப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர், ஏற்கெனவே கடந்த 2018 பிப்ரவரி யில், இன்னொரு தெலுங்கு மாநிலமான தெலங்கானா வின் முதலமைச்சர் சந்திரசேகரராவ், நடப்புக் கல்வி யாண்டில் (2018 - 2019) ஒன்று முதல் பன்னி ரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாநிலப் பாடத்திட்ட மாணவர் களும், நடுவண் பாடத்திட்ட மாணவர்களும் கட்டாயம் தெலுங்கை மொழிப் பாடமாகப் படிக்க வேண்டுமென ஆணையிட்டார்.

இந்தியத்தேசியம் பேசும் கட்சிகள் ஆளும் கர்நாட கத்திலும், தெலுங்கு தேசிய இனம் ஆந்திராவிலும் அந்தந்த மண்ணின் மொழிக்கான செயல் திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. ஆனால், தமிழ்மொழி காக்க முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மண்ணின் வீதிகளில், இன்றும் ஆங்கிலம்தான் கோலோச்சிக் கொண்டுள்ளது. தமிழ்நாடு கற்றுக் கொள்ளுமா?

●

# சங்கராச்சாரி



நமக்குள் சைவர்கள், வைஷ்ணவர்கள் என்று வேறாகச் சொல்லிக் கொண்டிருந்தாலும் வெள்ளைக் காரன் நமக்கு ஹிந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்தானோ நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது.

அவன் மட்டும் ஹிந்து என்று பெயர் வைத்திருக்கா விட்டால் ஒவ்வொரு ஊரிலும் சைவர், வைஷ்ணவர், சாக்தர், முருக பக்தர், பிள்ளையார் உபாசகர், ஐயப்பன் பக்தர், எல்லையம்மனைக் கும்பிடுகிறவர் என்று நம்மைப் பிரித்துக் கொண்டு தனித்தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம். இப்போது ஹிந்து சமூகம் என்ற பொதுப் பெயரில் சொல்லப்படும் சமுதாயத்தை இப்படி ஏழெட்டாகத் தனித்தனி மதம் என்று பிரித்துவிட்டால் அதற்கப்புறம் ஒவ்வோரு ஊரிலும் முஸ்லீம், கிறிஸ்தவர்கள் போன்ற மதத்தவர்கள்தாம் அதிகத் தொகை இருப்பார்கள். அதாவது இப்போது தேசத்தின் இரண்டு பகுதிகளில் மட்டும் பாகிஸ்தான் முளைத்திருப்பது போல இல்லாமல், நம் தேசம் முழுவதுமே பாகிஸ்தானா யிருக்கும்.

எத்தனையோ கிருத்திருமங்கள் செய்து பாகிஸ்தானைப் பிரித்த அதே வெள்ளைக்காரன்தான் எத்தனையோ யுக்திகள் செய்து நம்மை ஆரியர், திராவிடர் என்றெல்லாம் பேதப்படுத்திய அதே வெள்ளைக்காரன்தான் தன்னையும் அறியாமல் நமக்கு ஹிந்து என்ற பொதுப் பெயரைத் தந்து இன்று இந்திய தேசம் என்று ஒன்று இருக்கும்படியான மகா பெரிய நன்மையைச் செய்திருக்கிறான்.

***தெய்வத்தின் குரல் நூலில் இருந்து.***



## மதங்கள்

| | |
|---|---|
| ஆசிவகம் : | ஐயனாரைக் கடவுளாகக் கொண்டது. |
| ஜைனம் : | மகாவீரரை கடவுளாகக் கொண்டது. |
| பௌத்தம் : | கௌதம புத்தரை கடவுளாகக் கொண்டது. |
| ஐந்திரம் : | இந்திரனைக் கடவுளாகக் கொண்டது. |
| ஆக்னேயம் : | அக்னியைக் கடவுளாகக் கொண்டது. |

காணாபத்தியம் : கணபதியைக் கடவுளாகக் கொண்டது. (பிரம்ம தேவனையே கணபதி என்று முனிவர்கள் வணங் கினர் என்போர் உண்டு)

| | |
|---|---|
| சைவம் : | சிவனைக் கடவுளாகக் கொண்டது. |
| வைணவம் : | விசுணுவைக் கடவுளாகக் கொண்டது. |
| சாக்தம் : | சக்தியைக் கடவுளாகக் கொண்டது. |

மேற்கண்ட மதங்களில் பெரும்பாலானவை அழிக்கப்பட்டு மனுவாதிகளின் சூழ்ச்சியால் வெள்ளையன் வைத்த இந்து என்ற பெயர் இன்று இந்தியாவில் இருக்கிறது. தமிழர்களின் சமயம் எது? ஆசிவகத்திற்குப் பின் எதுவும் இல்லை. அதற்கு முன் தமிழர் சமயம் எதுவாக இருந்திருக்கும்? தமிழ் ஆய்வாளர்கள் பதில் தருவார்கள்.

**வேர்மகள்.**


### விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுபக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுபக்கம்)**

**பின்னட்டை ரூ. 10,000/- (முழுபக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ. 5,000/- (முழுபக்கம்)**

# மொங்கு

## சிறுகதை

அறம் வாழி கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு தனது ஊருக்கு வந்திருந்தாள். தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் நகரத்தில் வாழ்ந்து விட்டு ஊருக்கு வந்திருக்கிறாள் அறம்வாழி. ஊர் மிகவும் மாறிப்போ யிருந்தது. இந்த மாற்றத்தில் அவளுக்கு விருப்பம் இல்லைதான். ஆனாலும் அவளது ஊராயிற்றே மகிழ்வுடன் இருந்தாள்.

ஊர்க்காரர்களில் பாதிப்பேர் காணவில்லை. தன்னைப்போல் படிப்பதற்கும் பொருளீட்டுவதற்கம் நகரங்களுக்கு நகர்ந்து விட்டிருந்தனர். சென்ற இடங்களிலேயே வாழவும் தொடங்கி விட்டனர். ஆகவே மக்கள் தொகை குறைந்திருந்தது.

முன்பு இருந்த அமைதியான, மகிழ்ச்சியான உறவுகள் நிறைந்த ஊர் அத்தனையிலும் குறைவுடன் காணப்பட்டது. ஊருக்கு வந்ததில் அறம்வாழி மகிழ்ந்தாள். ஊரின் நிலைகண்டு கொஞ்சம் உருகித்தான் போனாள்.

ஊரில் தனது அப்பாவுடன் குடும்பமாய் இணைந்தே இருந்த சித்தப்பாவிடம் இதுபற்றி பேசினாள். அறம்வாழிக்கு சித்தப்பாதான் எல்லாம். நகரத்திற்குச் சென்று படிப்பதற்கு அப்பா ஒத்துக்கொள்ளாத நேரத்தில் சித்தப்பாதான் அறம்வாழி பக்கம் இருந்தார். அப்போது மட்டுமல்ல, அவளுக்கு விபரம் தெரிந்த நாள் முதல் சித்தப்பாதான் அவளுக்கு வேண்டியதைச் செய்தார். பன்னிரெண்டாம் வகுப்பு முடிக்கும் வரை சித்தப்பாவைப் பிரிந்து அவர் இருந்ததே இல்லை.

சித்தப்பாவிற்கு திருமணமாகி முதல் நாளில் முதல் இரவு அன்று சித்தப்பாவுடன்தான் தூங்குவேன் என்று அடம் பிடித்த குழந்தை அறம்வாழியின் பிடிவாதத்தைப் பார்த்து சினமடையாமல் சிலிர்த்து அவள் பாசத்தை மெச்சிக் கொண்டவர்கள்தான் அவ்வூரில் அதிகம். புதிதாய் வந்த சின்னம்மாகூட குழந்தையின் பக்கமே இருந்தாள். அவளுக்கு விபரம் தெரிந்த பின், சிலர் அவள் அறியும்படி அந்நிகழ்வை நினைவுபடுத்தும் போது அவள் உண்மையிலேயே தன் சித்தப்பாவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடாத குறையாக சித்தப்பாவைப் புகழ்வாள்.



கல்லூரியில் படிக்கும்போது சித்தப்பாவின் அலைபேசி நாள் ஒன்றுக்கு ஒரு முறையேனும் ஒலிக்கமாலிருந்ததில்லை. சித்தப்பாவுடம் பேசாத நாள் அவள் வாழ்வில் ஒரு நாளும் இல்லை என்றே கூறலாம்.

ஊருக்கு வந்த இரண்டாம் நாள் “சித்தப்பா நுங்கு வேணும் எப்போ பனங்காட்டுக்குப் போகலாம்“ என்று கேட்டாள்.

உடனே “போகலாம்மா“ என்று கூறிய சித்தப்பா பணிவல்லான் யாரை அழைத்து மொங்கு வெட்டச் சொல்வது? அப்படியே ஆள் கிடைத்தாலும் பனைமரம் வேண்டுமே என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

பணிவல்லான் சிறுவயதில் பனங்காடுகளில் இரவில் உதிரும் நுங்குகளையும் அணில் குடைந்ததால் கீழே விழுந்த நுங்குகளையும் பொருக்குவதற்காக போட்டி போட்டு ஊர் சிறுவர்கள் ஓடுவார்கள். பணிவல்லான் அண்ணனும்கூட இந்தப் போட்டியில் இருந்தார்.

இவர்கள் வீட்டில் காலையில் பொழுது புலர்வதற்கு முன்னமே எழுந்து விடுபவர்கள் இவர்களது அம்மாவும் அப்பாவும்தான் என்றாலும் அடுத்து எழுந்திருப்பது யார் என்ற போட்டி அண்ணன் தம்பி இருவரிடமும் இருந்தது. சில நேரங்களில் அம்மா எழுந்ததும் அண்ணனை எழுப்பி விடுவார்கள்.

தம்பி பணிவல்லோன் எழுந்து பார்க்கிறபோது அண்ணன் இருக்க மாட்டார். அவசரத்தில் எழுந்து ஓடி, நுங்கு கிடைக்காமல் ஒன்றிரண்டு நுங்குடன் தம்பி திரும்பினால் அண்ணன் நிறைய நுங்குகளை வெட்டிக் குடித்துக் கொண்டிருப்பார். அண்ணனிடம் தம்பிக்கு ரெண்டு மொங்கு கொடுடா என்று அம்மா சொல்வார். அண்ணன் மறுப்பார். அம்மா குறுக்கிட்டு “நான்தானே உன்னை காலையில எழுப்பி விட்டேன் தம்பிக்குக் கொடுடா“ என்றதும் அண்ணன் நுங்கு தந்தாலும் தராவிட்டாலும் சிக்கல் இல்லை என்ற எண்ணியிருந்த தம்பிக்கு சினம் தலைக்கு ஏறியது. அந்த சினம் அம்மாமேல். சினந்து கொண்டு கொஞ்ச தூரம் சென்று நின்று கொள்வார் தம்பி. அம்மாவே அண்ணனிடம் நுங்கை வெட்டி வாங்கிக் கொண்ட பணிவல்லோனிடம் கொடுப்பார். வாங்க மாட்டார். அம்மா அவர் முன் வைத்துவிட்டுச் சென்று விடுவார். சிறிது நேரத்திற்குப் பின்பு பணிவல்லோன் அந்த நுங்கைக் குடிப்பார். சிறிது நேரத்தில் சினம் ஓடி அம்மாவுடன் அன்பாக பேசத் தொடங்கி விடுவார்.

இப்படி பல நாட்கள் சென்றிருக்கின்றன. சில நாட்களில் அண்ணனுக்கு முன்பே பணிவல்லோனை தூக்கத்திலிருந்து அம்மா எழுப்பி விட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன. அதற்காக அண்ணன் அம்மாவை சினந்து கொண்டது இல்லை.

இவ்வாறு பல பழம் நிகழ்வுகள் பணிவல்லோனை மகிழ்ச்சிப்படுத்தின. ஆனால் இன்றைய சூழலில் மொங்கு என்ற வார்த்தை அவரை குழப்பத்தில் ஆழ்த்தியது. பலர் ஊரை விட்டு நகரங்களுக்குச் சென்று விட்டனர். பனை ஏறுவதற்கு ஆள் இல்லை. வேளாண்மை செய்ய ஆட்கள் இல்லை. பனம்பழம் நிலத்தில் விழுந்து யாரும் காபந்து செய்ய வேண்டியதில்லை நானே வளர்வேன் என்று வளர்ந்தன.

எப்போதாவது மழைபெய்து உழ வேண்டும் என்றால் அதற்கு அந்தக் குட்டிப் பனைகள் இடையூறாக இருந்தன. எனவே உழவர்கள் அவைகளை வெட்டியதோடு இல்லாமல் இருந்த பனைமரங்களையும் வெட்டி, ஐம்பது நூறு ரூபாய்களுக்கு வெட்டிக் கொண்டு போங்கள் என்று மனவேதனையுடன் கரிமூட்டம் போடுபவர்களிடம் விற்று விட்டார்கள். பனைகளை எல்லாம் உழவர்கள் இழந்து விட்டனர்.

முன்பெல்லாம் சிறுவர்கள், இளைஞர்கள் “வாங்கடா பனங்காட்டுக்குப் போய்ட்டு வரலாம்“ என்று செல்வார்கள். இப்போது அப்படி யாருமில்லை. அப்படிச் சொல்ல இப்போது பனங்காடுகளும் இல்லை.

பணிவல்லோனின் நினைவில் பழைய நினைவுகள் தோன்றி மகிழ்வையும் துன்பத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தன.

பள்ளியில் கோடை விடுமுறை விட்டுவிட்டால் சிறுவர்களுக்கு மதிய உணவே தேவை இருக்காது. பனங்காடுகள்தான் அவர்களது புகலிடம். காலையில் பழைய சோற்றை உண்டுவிட்டு பத்தரை மணியைப்போல் பனங்காட்டுக்குள் நண்பர்களாக கிளம்பினால் இரண்டு மணி வரை நுங்கு வெட்டிக் குடித்துவிட்டு ஊருக்குள் வருவார்கள். அதுவும் வீட்டுக்குப் போவதில்லை. குளிக்கும் ஊரணிக்குள் விழுந்து குளிக்கிறோம் என்ற பெயரில் ஊறிவிட்டு, மாலை நான்கு அல்லது ஐந்து மணிக்குத்தான் வீட்டுக்குப் போவார்கள்.

ஒருமுறை இப்படித்தான் காவல் பனையில் இருந்து நுங்குகளை வெட்டிக் கொண்டிருந்தபோத திடீரென்று குட்டிப்பனை மறைவில் இருந்து காவல் பணியில் இருந்த முத்தன் ஓடி வந்தார். இதைப் பார்த்து கீழே

நின்ற எல்லோரும் ஓடிவிட, பனையேறி நுங்கு வெட்டிக் கொண்டிருந்த சோலை மாட்டிக் கொண்டான். ஆனால் பனையை விட்டுக் கீழே இறங்கவில்லை. முத்தன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சோலை இறங்கவில்லை. பனையில் மீதம் இருந்த நுங்குகளையும் வெட்ட ஆரம்பித்தான்.

"வெட்டாதடா, வெட்டாதடா என்று முத்தன் கத்த, சோலையோ நீங்கள் இங்கிருந்து போங்கள் அப்போதுதான் இறங்குவேன் என்று அடம்பிடிக்க இருவருக்கும் பேச்சுப்போட்டி நடந்து கொண்டிருந்தது. சோலையை விட்டுவிட்டு ஓடிய நண்பர்கள் எல்லோரும் கொஞ்ச தூரத்தில் நின்று கொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். முத்தன் இறங்குடா என்று சொன்னதும் சோலை ஒரு பச்சை ஓலையை வெட்டி கீழே போட்டான். "டேய் ஏன்டா ஓலைய வெட்ற" என்று முத்தன் கேட்க, "நீங்க இங்கிருந்து போங்க அப்போதுதான் வெட்டாமல் இருப்பேன். நீங்க போகலன்னா மரத்தில இருக்கிற மொங்கு, கிட்டி, ஓலை, குருத்து எல்லாத்தையும் வெட்டி மொட்டையாக்கிட்டுத்தான் இறங்குவேன்" என்றான்.

வேறு வழியில்லாமல் முத்தன் அந்த இடத்தை விட்டு புறப்பட்டார் அவர் சிறிது தூரம் சென்றதும் சோலை விரைவாக மரத்திலிருந்து இறங்கி ஓடி நண்பர்களுடன் சேர்ந்து கொண்டான். நண்பர்கள் நடந்ததைக் கேட்டுச் சிரித்து சோலையைப் பாராட்டினார்கள். பின்பு காவல் இல்லாத பனையை நோக்கிச் சென்றார்கள். (காவல் பனை என்பதற்கு அடையாளமாக பனைமரத்தில் ஒருஆள் உயரத்தில் ஓலையைக் கட்டி வைத்திருப்பார்கள்)

அன்று மாலை வீட்டிற்குத் திரும்பியதும் அவரவர் வீட்டில் அவர்கள் அனைவருக்கும் பூசை நடந்தது. மலர்களுக்குப் பதிலாக அடிகள், கண்டிப்பான ஏச்சுகள் பயன்படுத்தப்பட்டன. முத்தனின் வேலைதான் என்று புரிந்து கொண்டார்கள் நண்பர்கள்.

இப்படிப் பல நிகழ்வுகள் பணிவல்லோன் மனதில் தோன்றி அவன் முகத்தை அழகாக்கின. இவை எல்லாவற்றையும் விட இளநாகன் செய்ததுதான் இன்று வரை நண்பர்கள் நடுவில் அடிக்கடி பேசப்பட்டு சிரித்து மகிழ ஏதுவாக இருந்தது.

இளநாகனின் திருமணம் நிறைவுபெற்று அவனது மனைவியும் அருகிலிருந்த போது நண்பர்கள் அனைவரும் சேர்ந்து அந்தக் கதையைச் சொல்ல மணப்பெண் வெட்கத்துடன் இருக்க அந்த வேளையில் அவள் மணப்பெண் என்பதையும் மறந்து வாய்விட்டுச் சிரித்தாள். மற்றவர்களும் அடிக்க முடியாமல் சிரித்தார்கள். அப்படி என்ன அந்த நிகழ்வில்?

நண்பர்கள் நுங்கு வெட்ட பனங்காட்டுக்குச் சென்றனர். வழக்கம் போல் சோலை மரமேறி வெட்டி விட்டு அருவாளை மரத்தில் இருந்தவாறே கீழே போட, அந்த அருவாளை எடுத்து சித்தன் நுங்குகளை கண் தெரியும்படி சீவி வரிசையாக வைத்தத் தொடங்கினான். சோலையும் இறங்கி வந்துவிட்டான். எல்லா நுங்குகளையும் சீவி வைத்தாகிவிட்டது. மொத்தத்தையும் எண்ணிப் பார்த்து, நண்பர்களுக்குள் சரிசமமாக பிரிக்கத் தொடங்கினான் சோலை. அவன் பிரிக்கத் தொடங்கியவுடன் அருகில் இருந்த இளநாகன் நுங்குகள் மீது எச்சிலைத் துப்பிவிட்டான். நண்பர்கள் அனைவரும் சினந்து விட்டார்கள். சினத்துடன் சிரிப்பும் வந்துவிட்டது. இளநாகனை பொய்ச்சினத்துடன் திட்டிவிட்டு வேறு பனைக்குச் சென்றார்கள். நண்பர்களுக்குள் இப்படி எத்தனையோ மறக்க முடியாத நினைவுகள் பனங்காட்டுக்குள் நடந்திருக்கின்றன. இவையெல்லாம் பணிவல்லோன் மனதை மகிழ்வித்தன.

"என்ன சித்தப்பா நுங்கு வெட்டித்தாங்ன்னு கேட்டா ஏதோ நெனப்புல சிரிச்சிக்கிட்ட இருக்கீங்க" என்று மகள் அறம்வாழி கேட்டதும்தான் பழைய நினைவுகள் அறுந்து இயல்புக்கு வந்தார் பணிவல்லான்.

"இல்ல தங்கம் பனைமரமும் கொறஞ்சு போச்சு, பனை ஏறவும் ஆள் இல்லை, அதான் சிந்தனை என்றார். "சரிம்மா நீ இரு, நான் போய் மொங்கு கொண்டு வரேன்" என்று புறப்பட்டார். "நானும் வரேன் சித்தப்பா" என்று அறம்வாழியும் புறப்பட்டாள். மறுத்தும் அறம்வாழி கேட்காததால் "சரி வா" என்று கூறிவிட்டு வாங்கருவாளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் பணிவல்லான்.


"சித்தப்பா வாங்கருவா எதுக்குப்பா" என்று கேட்டாள் அறம்வாழி. "வாழிம்மா இருக்கிற மரமெல்லாம் கவனிப்பு இல்லாம நிக்கிதுமா. பனை ஏறுறதுக்கு ஆள் இல்லை. நான் பனை ஏறி பல ஆண்டுகள் ஆகுது. அதனாலதான் நிலத்துலேயே நின்னுக்கிட்டு வாங்கருவாள வச்சு நொங்கு அறுக்கப் போறேன்" என்றார்.

அறம்வாழி ஆடித்தான் போய்விட்டாள். ஊர் எந்த அளவுக்கு மாறிப்போய் விட்டது. மகிழ்ச்சி கொஞ்சம் குறைந்த நிலையில் சித்தப்பாவோடு நடக்கத் தொடங்கினாள்.

**இருங்கோவேள்**

## அரியானா மாநில

# மடாதிபதி கைது!



அரியானா மாநிலம் பதே ஹாபாத் நகரை யொட்டிய தோகானா புறநகரைச் சேர்ந்தவர் அமர்புரி என்கிற பில்லு. 60 வயதான இவர் அங்குள்ள பிரபல மான பலக்நாத் கோவிலின் மடாதிபதியும் ஆவார். மந்திர, தந்திர கலைகளிலும் கைதேர்ந்த இவரிடம் ஏராளமான பெண்கள் குறி கேட்பதற்காக வருவ துண்டு.

இப்படி தன்னைத் தேடி வரும் பெண்களை தனது வலையில் சிக்க வைத்து அவர்களை கற்பழிப்பதாக இவர் மீது அண்மையில் புகார்கள் குவிந்தன. இதையடுத்து மடாதிபதி அமர்புரியை, பதேஹாபாத் பெண்கள் போலீஸ் நிலைய போலீசார் அதிரடியாக கைது செய்தனர். அவர் மீது 4 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இதையடுத்து அவரை 5 நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க போலீசார் கோர்ட்டில் அனுமதியும் பெற்றனர்.

இதற்கிடையே, அமர்புரி மடாதிபதியாக உள்ள கோவிலிலும், அவருடைய வீட்டிலும் போலீசார் அதிரடி சோதனை நடத்தி சந்தேகத்துக்குரிய பல சி.டி.க்களைக் கைப்பற்றினர்.

அப்போது, அவர் 120 பெண்களை தனது வலையில் விழவைத்து கற்பழித்தது தெரிய வந்தது. அது மட்டுமின்றி மடாதிபதி அமர்புரி, தான் அந்த பெண்களுடன் உறவு கொள்வதை செல்போனில் ரகசிய வீடியோவாக படம் பிடித்து, அதை வைத்து தொடர்ந்து அவர்களை மிரட்டி மீண்டும் மீண்டும் பல முறை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

மடாதிபதியால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் உறவினர் மடாதிபதி எடுத்த அத்தனை ஆபாச புகைப்படங்களையும் சி.டி.யில் பதிவுசெய்து அதை போலீசாரிடம் ஒப்படைத்து உள்ளார்.

இதுபற்றி பதேஹாபாத் பெண்கள் போலீஸ் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் பிம்லா தேவி கூறுகையில், தற்போது மடாதிபதியால் கற்பழிக்கப் பட்ட 2 பெண்கள் அவர் மீது புகார் அளிக்க முன் வந்திருப்பதுடன் இதுபற்றி வாக்குமூலம் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்து இருக்கின்றனர். மேலும் பாதிப்புக்கு உள்ளான பெண்கள் யார் யார் என சி.டி. மூலம் அடையாளம் காணப்பட்டு அந்த பெண்களிடமும் வாக்கு மூலம் பெறப்படும்" என்றார்.

இதற்கிடையே கைது செய்யப்பட்ட மடாதிபதி அமர்புரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள் ளார். அமர்புரி மீது சில மாதங்களுக்கு முன்பு, தனது கோவிலுக்கு வந்த ஒரு பெண்ணை கற்பழித்தாக பதேஹாபாத் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ள னர். அதில் அவர் ஜாமீனில் விடுதலை ஆகி வெளியே வந்து விட்டார்.

அதன்பின்பு, தனது பாதுகாப்பிற்காக போலீசா ருக்கு பணம் கொடுக்க மறுத்துவிட்டதால் போலீசார் திட்டமிட்டு தன்னை மீண்டும் வழக்கில் சிக்க வைத்துவிட்டனர் என்று, மடாதிபதி அமர்புரி குற்றம் சாட்டி உள்ளார்.

# பசுக்களை கடத்தியதாக கருதி
# வாலிபர் அடித்துக்கொலை

பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் ஒரு சிலர் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு அப்பாவி மக்களை கடுமையாக தாக்கிக் கொலை செய்யும் சம்பவங்கள் வடமாநிலங்களில் சர்வ சாதாரணமாக அரங்கேறி வருகின்றன.

இதுபோன்ற வெறியாட்டத்தை அண்மையில் கடுமையாக கண்டித்த சுப்ரீம் கோர்ட்டு இது வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை மட்டுமல்ல, மிகப்பெரிய குற்றமும் ஆகும் என்று கூறி யாரும் சட்டத்தை கைகளில் எடுத்துக்கொள்ள மாநில அரசுகள் அனுமதிக்க கூடாது என்றும் உத்தரவிட்டு இருந்தது.

**கடுமையான தாக்குதல்**

இந்த உத்தரவுக்கு பிறகும் ராஜஸ்தான் மாநிலம் அல்வார் நகர் அருகே பசு பாதுகாவலர்கள், அப்பாவி ஒருவரை அடித்துக் கொன்ற சம்பவம் நடந்துள்ளது.

அரியானா மாநிலம் கலோகான் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் அக்பர் கான் (வயது 28). இவர் தனது நண்பரான அஸ்லாம் என்பவருடன் 2 பசுக் களை தனது சொந்த ஊருக்கு அல்வார் அருகேயுள்ள லாலா வாண்டி காட்டுப் பகுதி வழியாக ஒட்டிச் சென்று கொண்டிருந் தார்., அப்போது அவர்கள் இருவரும் பசுக்களை கடத் திச் செல்வதாக கருதிய பசு பாது காவலர்கள் அமைப் பைச் சேர்ந்த கிராம மக்கள் சிலர் இரு வரை யும் வழிமறித்து கடுமையா கத் தாக்கினர்.


அப்போது அஸ்லாம் அங்கிருந்து தப்பியோடி விட்டார். அக்பர்கான் மட்டும் அவர்களின் பிடி யில் சிக்கிக் கொண்டார். இதனால் அவரை வன் முறைக்கும் பல் சரமாரி யாக தாக்கி அடித்து உதைத்தது.

இதில் படுகாயம் அடைந்த வாலிபர் அக்பர் கானை சிலர் மீட்டு அருகில் உள்ள ராம்கார் நகர ஆஸ்பத் திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே அவர் பரிதாபமாக உயிர் இழந்தார். அவருடைய உடல் ராம்கார் அரசு ஆஸ்பத்திரியில் பிணவறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப் பட்டு உள்ளது. அங்கு அக்பர்கானின் குடும்பத்தினர் விரைந்தனர்.

இந்தப் படுகொலை தொடர்பாக ராம்கார் போலீசார் அடையாளம் தெரியாத நபர்கள் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் 2 பசுக்களும் கிராம மக்களிடம் இருந்து மீட்டகப்பட்டன.

இந்தச் சம்பவத்துக்கு மாநில முதல்மந்திரி வசுந்தரரா ராஜே சிந்தியா கடும் கண்டனம் தெரிவித் தார். மேலும் தாக்குதல் நடத்திய அத்தனை பேர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்தார்.






“விவேகசிந்தாமணி“ என்பது சிறப்பான அறநூல். இதன் ஆசிரியர் ஆரடியார், அவருடைய ஒருபாட்டு இதோ:

*ஆபத்துக்கு உதவாப்பிள்ள!*
*அரும்பசிக்கு உதவாஅன்னம்!*
*தாகத்தைத் தீராத் தண்ணீர்!*
*தரித்திரம் அறியாய் பெண்டிர்!*
*கோபத்தை அடக்கா வேந்தன்!*
*குருமொழி கொள்ளாச்சீடன்!*
*பாபத்தைத் தீராத் தீர்த்தம்!*
*பயனிலை ஏழும்தானே!*

**விளக்கம் :**

1. வாழும் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிற பெற்றோர்கள். தாய், தந்தையர் ஆவர். அத்தகைய பெற்றோருக்கு அகத்தாலும், புறத்தாலும் உதவ வேண்டும். அப்படி அவன் செய்யத் தவறினால் ஆபத்துக்கு உதவாத பிள்ளையாக இருந்தால் அவன் பயன்படாத உயிரி என்று சொல்கிறார் ஆசிரியர்.

2. மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் வாழ உணவுமுக்கியம். அவனுக்கு மிகுந்த பசி எடுத்த போது உணவு கிட்டாமல் பசி ஆறி அடங்கிய பிறகு அவனுக்கு அந்த உணவு கிடைக்கப் பெற்றாலும் அவனால் அந்த உணவைச் சாப்பிட முடியாது. இந்நிலையில் அரும்பசிக்கு உதவாத அன்னம் பயன் இல்லாப்பொருள் என்கிறார் ஆசிரியர்.

3. தாகம் எடுத்த போது சில சமயம் நீர்கிடைக்காமல் போகிறது. தாகம் அடங்கிய பிறகு அது கிடைக் கக்கூடும். தாகம் எடுத்தபோது அவன் கைக்குக் கிட்டாத, தாகத்தைத் தீர்க்காத தண்ணீரும் பயன் இல்லாத பொருள் என்று சொல்கிறார் விவேக சிந்தாமணி ஆசிரியர்.

4. மனைவி என்பவள் குடும்பவிளக்கு, தற்காத்துத் தற்கொண்டானைப் பேணுபவள், நற்கொண்டான் வளர்த்தக்காள் வாழ்க்கைத்ததுணை என்றார் திருவள்ளுவர். கணவனுடைய வருவாய்க்கு ஏற்றபடி வாழ்க்கை, நடத்தவேண்டியவள்.

ஆனால் கனவனு டைய வறுமைநிலையை அறியாமல் வருவாய்க்கு மீறி செலவு செய்யும் மனைவி, இல்லாதவள் என்கிறார் விவேகசிந்தாமணி ஆசிரியர்.

5. மன்னன் தலைமைப்பீடத்தில் இருப்பவன். அந்த உயர்வு நிலையில் இருப்பவனுக்குப் பொறுமை மிகவும் தேவை. அப்படி இல்லாமல் கோபத்தை அடக்காத வேந்தனாக இருந்தால் அவன் பயனில்லாதவன் என்கிறார் ஆசிரியர்.

6. மாணவன், கல்வியைக் கற்பிக்கும், ஆசிரியரின் அறிவுரையை மதித்து ஏற்று அதன்படி நடந்தால் அவன் வாழ்வு ஒளிமயமாகும். அவ்வாறின்றி, அவன் குருமொழி கொள்ளாத சீடனாக இருந்தால் அவனைப் பயன்இல்லா உயிரினமாக ஆசிரியர் கருதுகிறார்.

7. இயற்கை தந்த அரும்பொருள் தண்ணீர் சில நீர்நிலைகள் தெய்வத்தன்மையாகக் கருதப்படுகின்றன. அவை, ஒருவனுடைய பாவத்தைத் தீர்க்க வேண்டும்.

அவ்விதம் பாவத்தைத் தீர்க்காத தீர்த்தமும் பயன் இல்லை என்கிறார் விவேகசிந்தாமணி ஆசிரியர்.

**பீம பெருமாள்**

ஒருக்கால் முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வராமல் இருந்திருந்தால் இந்தியா என்றொரு நாடு உருவா காமல் இருந்திருக்கலாம்.

முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு இந்தியா என்று ஒரு நாடு இருக்கவில்லை. அது (இந்தியப் பகுதி) கூர்ஜா பிரதிஹரர்கள் நாடு, கன்னோசி நாடு, பாலர்கள் நாடு, கலிங்க நாடு, ராஷ்டிரகூடர்கள் நாடு, பாண்டிய நாடு, சோழ நாடு, சேர நாடு என பல நாடுகளாகத் திகழ்ந்தது.

இந்தியா முழுமைக்கும் என்று ஒரே மன்னனோ, ஒரே தலைநகரமோ, ஒரே சட்டமோ, ஒரே நிர்வாகமோ, ஒரே நிர்வாக மொழியோ இருக்கவில்லை.


இன்று இருக்கும் இந்தியா முழுமையையும் ஒரே நாடாக இணைத்து, முழுமைக்கும் ஒரே அரசு, ஒரே தலைநகரம், ஒரே சட்டம், ஒரே நிர்வாகம், ஒரே நிர்வாக மொழி என்று வந்தது அலாவுதீன் கில்ஜி காலத்தின் தான்.

இதனை அதற்கு பின் வந்த முஸ்லிம் அரசர்கள் சுமார் 500 ஆண்டுகாலம் கட்டிக்காக்க கூர்ஜா பிரதீஹா நாட்டினர், கன்னோசி நாட்டினர், பாலர் நாட்டினர், கலிங்க நாட்டினர் என்பது மறைந்து கில்ஜி ஆளுகை என்றாயிற்று, அது தான் இன்றுவரை தொடர்கிறது இந்தியாவாக.

ஒருக்கால் முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வராமல் இருந்திருந்தால் இந்தியா என்றொரு நாடு உருவா காமல் இருந்திருக்கலாம்.

இவ்வாறு இந்தியா என்றொரு நாடு உருவாக காரணமாக இருந்த கோரி முகம்மது குத்பு தீன் ஐபெக்,

# இந்திய நாட்டை உருவாக்கியவர்கள் முஸ்லிம்களே!



பக்தியார் கில்ஜி, இல்டு மிலு, பால்பன், அலாவுதீன் கில்ஜி ஆகியோரைக் கொண்டு உயரிய சரித்திர ஆசிரியர்களின் மனதிலே பதிந்ததேயல்லால் பாமரர் களிடத்தில் அது சென்றடையவில்லை.

முஸ்லிம்கள் படையெடுப்பாளர்களாக போதிக்கப் படுகிறார்கள். எனினும் படையெடுப்பென்பது அன்றைய நியதி என்பதையும், அப்படி படையெடுத்து வந்த முஸ்லிம், அரசர்கள் இந்தியாவையே தங்கள் தாய்நாடாக கொண்டார்கள் என்பதையும், இவர்களில் பலர் இந்தியாவிலேயே பிறந்து, இந்தியாவிலேயே வளர்ந்தவர்கள் என்பதையும், இவர்கள் எப்பகுதியி லிருந்து வந்தார்களோ, அப்பகுதிகளை இவர்களின் எதிரிகள் கைப்பற்றி விட்டதால் அவை இவர்களின் எதிரி நாடுகள் ஆகிவிட்டன என்பதையும் இவர்கள் அவற்றோடு போரிட்டார்கள் என்பதையும் இவர்கள் இங்குள்ள செல்வத்தை (ஆங்கிலேயர் போல) தங்கள் மூதாதையர் நாட்டிற்கு எடுத்துச் செல்லவில்லை என்பதையும் இங்குள்ள செல்வத்தை இந்நாட்டின் வளத்திற்கே உபயோகித்தார்கள் என்பதையும், இவர்கள் இங்கிருந்த பிற மன்னர்களை வென்றது தான் நாட்டின் ஒருங்கிணைப்பை கொண்டு வந்தது என்பதும் சொல்லப்படுவதில்லை.

கோரி முகம்மது கூர்ஜா பிரதீஹரர்கள் நாட்டை கன்னோசி நாட்டை வென்றது படையெடுப்பாக சொல்லப்படுகிறதேயல்லால், அதனால் கூர்ஜா பிரதிஹரர்கள் நாடு, கன்னோசி நாடு என்பது மறைந்து டெல்லியை தலைநகராகக் கொண்ட அரசோடு அவை இணைந்து இந்தியா என்றொரு நாடு உருவாக அவர் வித்திட்டார் என சொல்லப்படுவதில்லை.

அவ்வாறே இல்டுட்மிஷ் ஒரு படையெடுப்பாள னாக சொல்லப்படுகிறாரேயல்லாமல் டெல்லி பேரரசிற்கு அப்பால் இருந்த பகுதிகளை வென்று இந்திய டெல்லிய பேரரசோடு இணைத்து ஒன்றுபட்ட இந்தியா உருவாக காரணமாக இருந்தவர் என்பதும் சொல்லப்படுவதில்லை.

அவ்வாறே அலாவுதீன் கில்ஜியும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, ஆப்கானிஸ்தான் முதல் வங்காளம் வரை உள்ள பகுதிகளை ஒவ்வொன்றாக வென்று டெல்லியை தலைநகராகக் கொண்ட அரசோடு இணைத்து, தன் ஆட்சியின் கீழ் ஒரே தலைநகரம், ஒரே சட்டம், ஒரே நிர்வாகம், ஒரே நிர்வாக மொழி கொண்ட அரசு என்று திகழச் செய்தவர்.

எனினும் முஸ்லிம்கள் படையெடுப்பாளர்கள் என்று பாட நூல்கள், கூறுகின்றனவேயல்லால் அவர்கள் தங்கள் ரத்தம் சிந்தி, சிறிதும் பெரிதுமான நாடுகளை வென்று, மத்திய அரசோடு இணைத்து ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கி தங்கள் உதிரத்தால் அது சிந்தாமல் சிதறாமல் கட்டிக்காத் தவர்கள் என்று சொல்லப்படுவதில்லை.

ஆனால் உண்மை நீண்ட நாட்களுக்கு உறங்காது. அது விழித்தெழும் போது வீறிட்டு எழும். எனவே ஒன்றுபட்ட நாடு உருவாக காரணமாக இருந்தவர்கள் முஸ்லிம்கள் அவர்கள் வராமல் இருந்திருந்தால் ஒன்றுபட்ட நாடு உருவாகாமல் போயிருக்கக் கூடும்.

நாட்டை ஒன்று படுத்தியதோடு அதனை மிக நீண்டகாலம். சுமார் 500 ஆண்டுகள், ஒன்றாகவே கட்டிக் காத்தது தான் நாட்டுப்பற்று வளர காரண மாயிற்று. இது முஸ்லிம்கள் நாட்டிற்கு ஆற்றிய மகத்தான கொண்டு நாட்டை பாதுகாத்தல் ஒன்று பட்ட நாட்டை உருவாக்கியது முஸ்லிம்கள் நாட்டிற்கு ஆற்றிய அருஞ்செயலாகும். நம் நாட்டை அவர்கள் மங்கோலியர் படையெடுப்பிலிருந்து பாதுகாத்தது இன்னும் சற்று உயரிய தொண்டாகும்.

13ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் டெல்லியில் முஸ்லிம்கள் தங்கள் பேரரசை உருவாக்கி, நாட்டை ஒன்றுபடுத்திக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் மங்கோலியாவிலிருந்து வெகுண்டெழுந்த முரட்டு இனத்திரான மங்கோலியர்கள் தங்கள் மாபெரும் தலைவன் செங்கிஸ்கான் தலைமையில் டெல்லிப் பேரரசை போன்று பன்மடங்கு விரிந்த, பன்மடங்கு வலிமை பெற்றிருந்த பேரரசுகளான சீனப் பேரரசு, மத்திய ஆசியா, மேற்கு ஆசியா பகுதிகளை வெற்றி கொண்டு டெல்லிக்கு அருகில் இருந்த மிக வலிமை பெற்ற குவாரசைம் பேரரசை நெருங்கியபோது, அதன் வலிமை பொருந்திய மன்னன் அலாவுதீன் (டெல்லியின் அலாவுதீன் கில்ஜி அல்ல) மங்கோலியர் வலிமைக்கு அஞ்சி காஸ்பியன், பகுதிக்கு ஓடிவிட குவாரசைம் அரசின் வாரிசு ஜலாலுதீன் பஞ்சாப் வந்து டெல்லியின் முஸ்லிம் மன்னன் இல்டுமிஷ்ஷிடம் அடைக்கலம் கோரிய போது, இல்டுமிஷ் மதியூகத் துடன் அதை நிராகரித்துவிட ஜலாலுதீனை துரத்தி வந்த செங்கிஸ்கான் டெல்லியை தாக்காமல் திரும்பிச் சென்றார். இல்லையேல் இந்தியா மங்கோலியர்களால் கைப்பற்றப்பட்டு ஒரு மங்கோலிய காலனியாகியி ருக்கும்.

இல்டுமிஷ்ஷின் மதியூகம் நாட்டைக் காத்தது. மங்கோலிய படையெடுப்பு இல்டுமிஷ் காலத்தில் மட்டும் நடைபெறவில்லை. அது டெல்லி சுல்தான்கள் பால்பன், அலாவுதீன் கில்ஜி காலத்திலும் தொடர்ந்தது. மங்கோலியரிடமிருந்து நாட்டை காக்க பால்பன் எல்லைப்புரத்தில் வலிமையான கோட்டைகளைக் கட்டி அதில் தீரமிக்க படையை நிறுத்தினான்.

இவரின் வல்லமை மிக்க ஆளுனன் ஷேர்கான் மங்கோலியர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தான். ஷேர்கானின் இறப்பிற்கு பின்மங்கோலி யரிடமிருந்து நாட்டைக் காக்க பால்பன் தன் மைந்தர்கள் முகம்மதுகான் மற்றும் புக்ராகானை எல்லைப்புற கவரனர்களாக நியமித்தான்.

வலிமையும் தீரமும் மிக்க முகம்மதுதான் மங்கோலியருடன் நடைபெற்ற யுத்தத்தில் மாண்டான். தன் 80வது வயதில் முதியோனாகிய பால்பனுக்கு இது ஒரு பேரிடியாக அமைந்தது.

நாட்டைக் காப்பதில் தன் அன்பு மகனை பறிகொடுத்த பால்பன் தன் பணியில் சற்றும் தளர்ச்சியடையாமல், உடன் மேல் நடவடிக்கை எடுத்து மங்கோலியர்களை வென்று நாட்டைக் காத்தான்.

ஏனோ இந்திய பாடநூல்கள் இத்தியாகத்தை போற்றுவதில்லை அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் மங்கோலியர் அடுக்கடுக்காய் நாட்டின் மீது படை யெடுத்து வந்தனர். இரண்டு முறை அவர்கள் டெல்லி யையும் கைப்பற்றினர். ஆனாலும் அலாவுதீன் கில்ஜி மனம் தளரவில்லை. தன் உயரிய அதிகாரிகளான ஜாபர் கான், காஜிமாலிக், மாலிக் காபூர் ஆகியோரைக் கொண்டு மங்கோலியர்களை மிரண்டு ஓடச் செய்தான்.

மங்கோலியர்களை வீழ்த்தி நாட்டைக் காத்ததில் மேற்சொன்ன மூன்று அதிகாரிகளின் பங்கு மகத் தானது. இலட்சக்கணக்கில் திரண்டு வந்த வீரமிக்க மங்கோலியர்களைத் தாக்கி, சின்னா பின்னப்படுத்தி, சிதறி ஓடச்செய்தான் ஜாபர்கான்.

அதனால் நீர் நிலைகளில் தாகம் தீர தண்ணீர் பருக குதிரைகள் தயங்கினால் "ஏன் ஜாபர்கானை கண்டு விட்டீர்களா?" என மங்கோலியர் கேட்டதாக ஒரு கூற்று. அது போன்றதே காஜி மாலிக் மற்றும் மாலிக் காபூரின் ஆற்றலும், டெல்லியை கைப்பற்றிய மங்கோலியர்களை தாக்கி, இடுப்பொடிந்து சிதறி ஓடச் செய்தனர்.

இவர்கள் மங்கோலியர்களைப் போன்றே அலாவுதின் கில்ஜியும் ஒரு போர் விரும்பியாக (War Lord), தீரனாக, அஞ்சாநெஞ்சினனாக, போர் தந்திரம் மிக்கவனாக இருந்ததே மங்கோலியர் தோல்விக்கு மிக முக்கியக் காரணம்.

இத்தகைய முஸ்லிம் சுல்தான்களும், தளபதிகளும் இல்லாதிருந்தால் நம்நாடு மங்கோலியரால் கைப்பற்று பட்டு, இது ஒரு மங்கோலியக் அடிமை நாடாக ஆகியிருக்கும்.

அவ்வாறின்றி ஒன்று படுத்தப்பட்ட நாட்டை மங்கோலியரிடமிருந்து பாதுகாத்து இந்தியாவாகவே திகழச் செய்தது முஸ்லிம்கள் இந்தியாவிற்கு ஆற்றிய அளவிடற்கரிய பெருந் தொண்டாகும்..



## இலங்கைக்கு பிரதமர் மோடி புகழாரம் "இந்தியாவின் நம்பிக்கைக்கு உரிய கூட்டாளி"?

**இந்தியாவின் உதவியுடன் இலங்கை முழுவதும் நெருக்கடி கால ஆம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்தவத ற்கான நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திரமோடி டெல்லியில் இருந்து காணொலி வழியாகப் பேசினார்.**

**அப்போது அவர், "இலங்கையை ஒரு பக்கத்து நாடாக மட்டும் நான் பார்ப்பதில்லை. தெற்காசியாவில் மிகச் சிறப்பான, நம்பிக்கைக்கு உரிய கூட்டாளியாகத்தான் பார்க்கிறேன்" என்று புகழாரம் சூட்டினார்.**

**மேலும், "நல்ல தருணங்களிலும், மோசமான தருணங் களிலும் எப்போதுமே இலங்கை கூப்பிட்ட குரலுக்கு முதலில் பதில் அளிக்கும் நாடு இந்தியா" என்றும் மோடி குறிப்பிட்டார்.**

**இலங்கைக்கு தான் மேற்கொண்ட பயணத்தின் போது, அந்த நாடு முழுவதும் நெருக்கடி கால ஆம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்துவதற்கு உதவுவதாக வாக்குறுதி அளித்ததாகவும், அதை தற்போது நிறைவேற்றி வைத்து இருப்பதாகவும் மோடி தெரிவித்தார்.**

# உயிரைக் கொடுத்து எதிர்ப்போம்!

# ஜெகத் கஸ்பர் முழக்கம்



சுதந்திரத்திற்கு முன்னால் பிரிட்டானிய ஆட்சி காலத்தில் மகாத்மா காந்தி நாட்டுத் துரோகி, அரச விரோதி, அதே மகாத்மா காந்தி நாட்டு துரோகியாகிய மகாத்மா காந்தி இன்று நமக்கு தேசப்பிதா. யார் எப்போது நாட்டு விரோதியாய் இருக்கிறார்கள் எப்போது அவர்கள் தேசப்பிதாவாக மாறுகிறார்கள் என்று நீங்கள் எந்த இடத்தில் எந்த நிலைப்பாட்டில் இருக்கிறீர்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை பொறுத்தது. அந்த வகையில் இன்று சொல்கிறேன்.

கன்னியாகுமரியில் ஏற்படுத்தப்போகும் சரக்குப் பெட்டகத் திட்டத்தை, ஸ்டெர்லைட் திட்டத்தை நியூட்ரினோ திட்டத்தை, மீத்தேன் திட்டத்தை எதிர்ப்பதால் ஜெகத் கஸ்பாரை சமூக விரோதி என்றும் தேச விரோதி என்றும் சொல்வீர்களே யானால் நான் ஒரு ஃபாதர் என்று அழைக்கப்படுவதை விட, அல்லது ஒரு அரசியல் விஞ்ஞானம் படித்தவர் என்று அறியப்படுவதைவிட, ஒரு மூலதன விஞ்ஞானம் படித்தவர் என்று அறியப்படுவதைவிட, சமூக விரோதியாகத்தான் அறியப்பட விரும்புகிறேன். இதில் எனக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை ஏன் சொல்சிறேன் இது ஒரு திட்டத்தை எதிர்ப்பதற்காக அல்ல, நான் கன்னியாகுமரிக்காரன்.

கன்னியாகுமரியில் ஒரு குண்டூசி கூட தயாரிக்கிறதுக்கு ஒரு தொழிற்சாலை இல்லை. அது இருக்கக் கூடிய சூழமைவு இல்லை. அந்த ஊரில் சூழமைவு இல்லை. இங்கு அனைத்து உலக சரக்குப் பெட்டகம் தேவையா? ஐயா வைகை செல்வன் சார் இருக்காங்க, உங்க தலையில் சுமையை தூக்கி நாங்கள் வைத்தால் ஐயா நீங்கள் எவ்வளவு தாங்குவீங்க? ஒரு 70வது கிலோ தாங்குவீங்களா? நானூறு கிலோ உங்கள் தலையில் தூக்கி வைத்தால் என்ன ஆகுமையா? மனிதர்களுக்கு எது பொருந்துமோ இயற்கைத் தாய்க்கும் அது பொருந்தும். மனிதர்களுக்கு எது பொருந்துமோ இயற்கைத் தாய்க்கும் அது பொருந்தும். வளர்ச்சி வேண்டாம் என்று அல்ல, இந்த இயற்கைத் தாய் எதை தாங்குவாளோ அதை அந்த இயற்கை மீது தூக்கி வையுங்கள்.

67 மீனவ கிராமங்கள் இணைந்து வாழக்கூடிய நிலப்பரப்பில், இந்த நாட்டினுடைய மீன் ஏற்றுமதியில் ஏறக்குறைய 40 சதவீதம். இப்ப எல்லாம் சொல்லு வார்கள். நீங்க கிறிஸ்துவர் நீங்க மிஷனரி என்று சொல்வார்கள். கிறிஸ்துவம் வந்து ஒரு வேளை ஐரோப்பாவில் இருந்து வந்திருக்கலாம். இந்த தோலு இருக்குதுல்ல, இந்த தோலு ஆயிரம் இரண்டாயிரம், பத்தாயிரம் வருடமாக இந்த ஊருக்குள் இருக்கிறது. அது இந்த ஊருக்குள்ளது. நீ யார் சொல்லுறதுக்கு?




எனக்கு பூர்வீகம் இது. இது என்னோட ஊர், என்னோட நிலம், என் நிலத்துல எப்படி இருக்கனுங் கறத நான் தான் முடிவு பண்ணனும். யாரையும் கேட்டு பண்ணமுடியாது.

67லிலிருந்து ஒரு வர்த்தகத்துறைமுகம் கேட்கிறோம் கொண்டுவாங்க மீன்பிடித்துறைமுகம் ஒன்று கேட்கிறோம். நீங்க ஒன்றுக்கு பத்து வையுங்க. நாங்க வேண்டாம்னு சொல்லலையே, நீங்க வந்து வர்த்தகத்துறைமுகம் போட்டுத் தரமாட்டீங்க. மீன்பிடித்துறைமுகத்தையும் தரமாட்டீங்க, ஆனா அநீதியாக சரக்கு பெட்டகம் கொண்டு வருவோம்னா எதிர்ப்போம், எதிர்ப்போம் உயிரை கொடுத்து எதிர்ப்போம். அதில் மாற்றுக்கருத்துக்கிடையாது.

1947 ஆகஸ்டு அன்னைக்குத்தான் நம்ம வந்து ஜன நாயக அடிப்படையிலான ஒரு அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டோம். 1950 ஜனவரி குடியரசா மாறியது. குடியரசு ஜனநாயகமா மாறனும்னா என்ன அர்த்தம், ஆளுகிறவன் ஆளப்படுகிறவன் என்கிற பேதம் இல்லை. ஜனநாயகத்தில் குடியரசு இறை யாண்மை என்பது உங்களுக்கும், எனக்குமே தவிர அரசாங்கத்திற்கோ ஆளுகிறவர்களுக்கோ அல்ல.

உங்களுடைய எங்களுடைய இறையாண்மை ஒரு ஐந்து வருடம் எங்க சார்பில் ஆளுங்கய்யா, அப்படின்னு ஒரு டெலகேட் பண்ணா, ஏதோ அவங்களே எல்லாம் என்று எண்ணலாமா? வட கிழக்கு பருவமழையைத் தகவமைத்துத் தருவது எது? மேற்குத்தொடர்ச்சி மலை. 700 லட்சம் ஆண்டுகளாக இயற்கை தாய் தந்த மலை. உங்களுக்கு தெரியுமா? உலகத்தில் உள்ள மகா நதிகள் எல்லாம் பனிமலை யில்தான் தொடங்குகிறது. கங்கை, யமுனை, பிரம புத்திரா, அமேசான், நைல் அத்தனை நதிகளும் எங்கு தொடங்குது பனிமலையில்தான். ஒரு பனிமலைகூட இல்லாம தக்காண பீடபூமிமுதல் குமரி எல்லை வரைக்கும் மகாநதி, கோதாவரி, காவேரி, பாலாறு, பெரியாறு, என்று வாழவைக்கக்கூடிய நதிகளைத் தரக்கூடிய தாய் மேற்குத் தொடர்ச்சி மலை. அது தாய், பெரும் தாய், சாதாரண தாய் இல்லை, எப்படி தருது, பனிமலை இல்லாம படைப்பின் பேரதிசயங்களின் ஒன்றுதான் புல்தரை. மேலே போய் பார்த்தீங்கனா தெரியும். அந்தப் புல்தரையில் மழையை தாங்கி, சொட்டு சொட்டாகத் தந்து ஊற்றுகளைத் தந்து சிற்றோடைகளைத் தந்து சிற்றோடைகளை சிறுநதிகளாக்கி, பல சிறுநதிகளை இணைத்து உள்ளுக்குள்ளே தாங்கிதான் மகாநதியாக பெரியாறாக கொண்டு வந்து நமக்கு சேர்க்கிறது.

செல்போன் இந்த நாட்டுக்கு மனித உடல் நலத்திற்கு பாதிப்பு என்றால் அதைப்பற்றிய நடவடிக்கை எடுப்பது தவறில்லை. ஒருவேளை அது புற்றுநோயை உருவாக்குகிறது என்றால் அதை பயன்படுத்தாதீர்கள் என்று நாம் சட்டம் இயற்றலாம். மீத்தேன் திட்டம் என்று சொல்றாங்க. ஆனால் தஞ்சை படுகை அப்படிங்கறது ஒரு உபரி பொருளாதாரத்தை விவசாய நிலத்தின் மூலமாக லட்சம், லட்சமாக தருவதாகும். அன்றைய நிலப்பரப்பில் 56 நாடுகளையும் வெல்கின்ற அளவிற்கு ராஜேந்திர சோழ அரசன் என்கிற சோழ பேரரசனை உருவாக்கிய விவசாய நிலம் தஞ்சை நிலம்.

விவசாய மண்டலம் விவசாயப் படுகையை நீங்கள் யோக்கியமானவர்களென்றால் நல்லவர்களென்றால் விவசாயத்தை வளருங்கள். 28,000 கோடி 50,000 கோடி விவாசயத்துல கொண்டு வந்து போடுங்க. அவனுக்கு ஆதரவு வாங்கிக்கொடுங்க. இந்த ஊர்ல இயற்கையின் தொழிற்சாலை ஒரு 100 செய்யுங்க. அவனுக்கு இலவசமாக கொடுத்து, வாழ வையுங்க. நீங்கள் கட்டணவழிச் சாலை அமைக்கும் போது, அந்த இடத்தில் ஏற்கனவே ஒரு சாலை இருக்குமல்லவா, இருந்ததல்லவா, மக்கள் வரிப் பணத்தில் உருவான தல்லவா, அரசு நிலத்தில் உருவா னதல்லவா, யாரெல் லாம் கட்டணம் செலுத்தாமல் பயணம் செய்ய விரும்புகிறார்களோ, அவர்கள் பயணிப்பதற்கு அந்த சாலையை விட்டுவைத்துவிட்டு, அதை ஒட்டித்தான் கட்டண சாலை அமைக்கப்படுமே தவிர, இருக்கிற சாலையை கவளீகரம் செய்துகொண்டு, அதை கட்டண சாலையாக மாற்றுகிற அராஜகம் இங்கு மட்டும் தான்

நடக்கிறது. வேறே எங்கேயும் நடக்காது. எங்க ஊரில் இருக்கும் ஏழையை கட்டணம் கொடுத்தாதான் பயணிக்க முடியும்னு எப்படிச் சொல்வீங்க. பத்து வருடம் ஆயிடும் இல்லையா.

ஒரு நாளைக்கு கலெக்ஷன் எவ்ளோ சொல்லுங்க. இந்த வாரம் இவ்ளோ காசு வந்ததால கேப்பிடல் குறைந்தது. அப்படின்னு போடசொல்லுங்க. ஏன் போடல்ல, இந்தக் கேள்வி கேட்டா நாங்க தேசத் துரோகி, சமூகவிரோதியா, பார்த்துக்கலாம்.

இன்னைக்கு அமைச்சர் இருக்காரு மன்னிக்கணும். ஒரு துறையைச் சொல்லுங்க ஒரு நிர்வாக அலகை சொல்லுங்க ஊழல் இல்லாத லஞ்சம் இல்லாத ஒரு அலகை சொல்லுங்க. நான் தலைவணங்குறேன் விட்டுவிடுகிறேன்.

இந்த தோல் சொன்னேன்ல, இந்த உங்க தோல், என் தோல், நம்ம தோல், ஏன் தமிழ் தோல், சரியிங் களா. இந்த தமிழ் தோல் பற்றி கம்பர் சொல்லியிருக் கிறாரு, "வல்லவனும் நீயோ வளநாடும் உனதோ" உன்ன நம்பியாடா நான் தமிழ் படிச்சேன் போடா, என்று சொன்னார் பாத்தீங்களா, அது எதிர்ப்பு. இது தான் தமிழன், தன் தன்மானத்தையும், தன் உறுப்புக்களையும், தன் உரிமைகளையும், எதுவரையிலும் விட்டுக் கொடுக்க மாட்டான். தன் உயிரையும் கொடுத்துக் காப்பான். அதற்காக அவனை நீங்கள் சமூக விரோதி யென்று சொல்வீர்கள் என்றால் சந்தோஷத்தோடும், பெருமிதத்தோடும் ஏற்றுக் கொள்கிறோம். எல்லாப் புகழும் இறைவனுக்கே...

**கோவில் என்பதன் பொருள்.**

"கோவில்" என்றால் இறைவன் தங்கும் இடம் என்று பொருள் "கோ" என்றால் தலைவன் அல்லது இறைவன், "இல்" என்றால் தங்கும் இடம் என்று பொருள். கோஇல் என்பதே கோவில் என்றானது. அதேபோல் ஆலயம் என்ற சொல்லுக்கு ஆன்மாலயிக்கும் இடம் என்று பொருள். கடவுள் என்பதற்கும் இதே போன்ற பொருள் உள்ளது. "கட" என்றால் கடந்தவர் என்று பொருள். "உள்" என்றால் உள்ளம் என்றும் பொருள் கொள்ளலாம். "நிற்பது" என்றும் பொருள் கொள்ளலாம். கடவுள் என்பவர் உள்ளத்தைக் கடந்து நிற்பவர் என்பது பொருளாகும் எல்லாவற்றையும் கடந்தவர் என்றும் பொருள் கொள்ளலாம்.

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை.

தொகுப்பு

**பீம. பெருமாள்,** அண்ணா நகர் தமிழ் சங்கம்.

## பெண்மை

தன்னைச் சுவைக்கும்
நாவே உமிழ்ந்தெறியும்
என்பதறிந்தும் உணவாகும்
பெண்மை...

இருக்கும் போதே
இறந்து போன இதயம்
பிறக்கும் முன்னே
கலைந்து போன கனவுகள்
பிடிக்கும் முன்பே
பிரிந்து சென்ற உறவுகள்
எதுவாகினும்
தன்னம்பிக்கை இன்னும்
தளரவில்லை கண்ணே...

அனைவரின் விருப்பங்கள்
மலர்வதற்கு தன்னையே
புதைத்துக் கொள்கிறது
பெண்மை...

தன்னை மீட்கும் தூண்டில்களை
எதிர்பார்த்த படியே
மடிந்து போகின்றன
சில பெண் மீன்கள்...

தூண்டுதல் இன்றி
சுடர்விடும் தீபம்
பெண்கள்...

மகிழ்வான கவிதையை
மன்றாடிக் கேட்கிறேன்
மனம் மறுத்துவிட்டது
ஏன் என்றால்,
அதுவும் என்னிடம் எதிர்பார்க்கிறது
மகிழ்வை வார்த்தைகளில் அல்ல,
வாழ்க்கையில்...

**உ. அ. சிந்து.**

தமிழ் மாமணி, **வா.மு.சே.திருவள்ளுவர்,** இயக்குனர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

# உலகை ஆளும் தமிழ்




உலகெங்கும் தமிழர்கள் 12 கோடிக்கு மேல் பரந்து வாழ்கிறார்கள். தமிழகத்தில் ஏறத்தாழ 8 கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் பிழைப்புத் தேடி தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். இலங்கையில் நடைபெற்ற விடுதலைப்போர்களினாலும் உலகெங்கும் தமிழர்கள் அகதிகளாக புலம் பெயர்ந்தனர்.

கல்வி வேலைவாய்ப்புகளுக்காக பன்நெடுங் காலமாக தமிழர்கள் அயல்நாடுகளுக்கு சென்றுள் ளனர். அதிலும் குறிப்பாக இருபது ஆண்டுகளாக ஏராளமான இந்தியர்கள் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுள்ளனர். சென்றுள்ள தமிழர்களின் மொழி உணர்வு, நாட்டை ஆள்வோரின் மொழி ஆதரவு போற்றி மகிழத்தக்கதாகும்.

மலேசியாவிற்கு பிழைப்புக்காக சென்ற தலை முறைகள் தமிழ் பயில 1000க்கும் மேற்பட்ட தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. இன்று அது 523 எனக் குறைந்தாலும் தமிழர்கள் தமிழ படிக்க மலேசிய அரசும், மலேசியத் தமிழர்களும் தமிழுக்குரிய நிலையை உயர்த்திப் பிடிக்கின்றனர்.

அண்மையில் நான் மலேசியா சென்றிருந்த போது தமிழ்ப் பிள்ளைகள் 20 சதவீதம் பேர் சீனம் பயில்கிறார்கள் என்பதால் அரசும் ஆசிரியர்களும் பெற்றோர்களுக்கு தமிழைப் பயிற்றுவியுங்கள் என விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்வில் பங்கேற்றேன். மொழியைக் காக்கும் பணியில் மலேசியத் தமிழர்களின் ஆர்வத்தைப் பாராட்டினேன்.

ஆட்சி அதிகாரத்தில் தமிழர்கள் எல்லா நிலைகளிலும் உள்ளனர். வேலை வாய்ப்பு சமவிகித முறையில் இல்லை என்ற முனுமுனுப்பு இருந்தாலும் தமிழர்கள் அமைச்சர்களாக. அதிகாரிகளாக, அலு வலர்களாக, ஆசிரியர்களாக இருப்பதைக் காணலாம்.

சிங்கப்பூரில் ஆங்கிலம், தமிழ், சீனம், மலாய் நான்கு மொழிகளும் ஆட்சி மொழியாக உள்ளன. அனைவரும் தாய்மொழி வாயிலாகவே கற்க வேண்டும் என்பது சட்டம். தமிழ் மாணவர்கள் தமிழ் வாயிலாகவே கற்கின்றனர். அனைத்துத் துறைகளிலும் தமிழின் ஆளுமையை சிங்கப்பூரில் காணலாம். ஆட்சி அதிகாரத்திலும் தமிழர்களுக்கு சம உரிமை உள்ளதை அறியலாம்.

அமெரிக்கா, வடகொரியா அமைதிப் பேச்சு வார்த்தை உலகின் மிகச்சிறிய நாடான சிங்கப்பூரில் சந்தோசா தீவில் நடைபெற்றது. அனைத்து பாதுகாப்பு வசதிகளும் கொண்ட சந்தோசா தீவில் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அந்தப் பேச்சு வார்த்தையில் இரு தரப்பிலும் இருந்த பெருமக்கள் தமிழர்கள், உள்துறை அமைச்சர் சண்முகம், வெளிவிவகார துறை அமைச்சர்

விவியின் பாலகிருட்டிணன். இருதமிழர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர்.

ஈழத் தமிழர்கள் இலங்கையில் நடைபெற்ற போர்களினால் உலகமெங்கும் புலம் பெயர்ந்தனர். கனடா, ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து, கனடா, ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா என பல்வேறு நாடுகளிலும் அகதிகளாகச் சென்றனர். சென்ற மக்கள் உயிரை மட்டும் காக்கவில்லை. உயிருக்கு இணையாக தமிழையும் தமிழ் பண்பாட்டையும் காத்து உலகறியச் செய்துள்ளனர்தெ.

நான் கனடா சென்றிருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, தற்போது நகர சபை உறுப்பினராக உள்ள சிம் கரிசியானிசுதம் தொகுதி மக்களுக்கான அச்சடித்த அறிக்கையை வழங்கினார். முழு அறிக்கையும் தமிழிலேயே இடம் பெற்றிருந்தது. அதைப் பார்த்து வியப்படைந்த நான். அதைப்பற்றி கேட்டதற்கு, தமிழ் மக்கள் என் தொகுதியில் உள்ளார்கள் என்று கூறிய விடை பெரும் மகிழ்ச்சியாக இருந்தது.

டொரண்டோ மாநகர சபையில் நடைபெற்ற பத்திரிகையாளர் கூட்டத்திலும் பங்கேற்றேன். அப்போது மற்ற மொழிகளோடு தமிழிலும் அறிக்கையை வைத்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராதிகா சிற்சபேசன் கனடிய நாடாளுமன்றத்தில் தமிழில் உரையாற்றியது இன்றும் வலைத்தளங்களில் வலம் வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பியதைக் காணலாம். இன்றும் தமிழர் கெரி ஆனந்த சங்கரி நாடாளுமன்ற உறுப்பினராகவும், பலர் நகரசபை உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கோவில் அனைத்தும் கனடா நாட்டிலும் உள்ளது. அவர்கள் சுதந்திரமாக தம் மண்ணில் வாழ்வதுபோல் வாழ்கின்ற சுதந்திர உணர்வை கனடிய அரசு தந்துள்ளது. தமிழர்கள் பொங்கல் திருநாளான தைமாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அறிவித்துள்ளது. கனடிய பிரதமர் வேட்டி, சட்டை உடுத்தி பொங்கல் கொண்டாடியதை அறிவோம்.

அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலங்களிலும் தமிழ்ச் சங்கங்கள் உண்டு. ஒவ்வொரு தமிழ்ச் சங்கமும் ஒரு தமிழ் இதழ் நடத்துகின்றன. தமிழ் குழந்தை களுக்கு தமிழ் வகுப்புகள் நடத்தி பயிற்றுவிக்கின்றன. வட அமெரிக்க தமிழ்சங்கங்களின் பேரவையின் சார்பில் ஆண்டுதோறும் மாநாடுகள் நடத்தி தமிழகத் திலிருந்து பெருமக்களை அழைத்து தமிழ் உணர்வை மேலோங்கச் செய்கிறார்கள்.

2015ஆம் ஆண்டு வாஷிங்கடன் நகரில் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இங்கு நடந்த போராட்டங்களுக்கு ஆதரவாக அமெரிக்காவிலும் போராட்டம் நடத்தும் அளவிற்கு தமிழ் உணர்வில் ஓங்கி நிற்கின்றனர் அமெரிக்கத் தமிழர்கள். தமிழர்கள் பகுத்தறிவுக் கொள்கையிலும் ஆன்மிகப் பணியிலும் அயராது தொண்டாற்றுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் பெரும்பாலும் ஈழத்தமிழர்களே. அவர்களின் தமிழ் உணர்வும், தமிழ் மேல் கொண்ட பற்றும் வியப்புக்குரியது. அகதிகளாகச் சென்ற பெருமக்கள் இன்று எல்லா நிலைகளிலும் மேலோங்கி உள்ளனர். போராட்டக் காலங்களில் நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளேன். அங்கு சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் அரசு பள்ளிகளில் ஈழத் தமிழ் மக்களே தம்மக்களுக்கு வகுப்பு வாரியாக பிரித்து வகுப்பு நடத்திய தமிழ் உணர்வைக் கண்டுள்ளேன். நாட்டியம், நடனம், ஆன்மிகம் அனைத்தையும் தம் வழிமுறையினருக்கு வழங்கியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் தமிழர்கள் பெரும்பான் மையாக வசிக்கின்றனர். அங்கும் மாநாடுகள் ஏராளமாக நடைபெறுகின்றன. ஆஸ்திரேலிய அரசே அண்மையில் தமிழை அங்கீகரித்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் வாழும் தமிழர்களுக்கு பெயரில் தமிழ் உள்ளது. சிலர் தத்தி தத்தி பேசுகின்றனர். அவர்களுக்கு தமிழ் பயிற்றுவிக்க உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கமும் எஸ்.ஆர்.எம் .பல்கலைக் கழகமும் இணைந்து 50க்கும் மேற்பட்ட தமிழாசிரி யர்களுக்கு பயிற்றுவித்து பட்டமளிப்பு விழாவில் உலகத் தமிழறிஞர்களோடு டர்பன் நகரில் பங்கேற் றேன். இந்த பெரும்பணியை மிக்கிசெட்டி என்ற தமிழர் தமிழ் உணர்வோடு ஆற்றிவருகிறார். எண் ணற்ற தமிழ் கோவில் தென் ஆப்பிரிக்காவில் உள்ளன.

ரியூனியன், மொரீசியஸ், சீசல்ஸ், மியான்மர் என உலகநாடுகளில் பலவற்றிலும் தமிழ் அன்னை வீற்றிருக்கிறாள். ஆனால் தமிழ்நாட்டில் மெட்ரிகு லேஷன் பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக இல்லை. தமிழ் படிக்காமலேயே பள்ளிக் கல்வியை முடிக்கும் அவலம் உள்ளது தற்போது அரசு பள்ளிகளில் பாலர் வகுப்பு முதல் ஆங்கிலம் உண்டு என்று சொல்வது தமிழை புதைப்பதற்கு நிகராகாதோ? மக்களும் ஆட்சியாளர்களும் எண்ண வேண்டும். தமிழ் அன்னை தமிழ்நாட்டுக் கல்விக் கூடங்களில் ஆள வேண்டும்.

●

# பன்முக ஆற்றல் கொண்ட அரசியல் தலைவர்!

**தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர்**
**தோழர் பெ. மணியரசன் இரங்கல் செய்தி!**



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சாராக இருந்தவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் 7.8.2018 மாலை 6:10 மணிக்கு, சென்னை காவேரி மருத்துவமனையில் காலமான செய்தி துயரமிக்கது. தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் சார்பில், கலைஞர் அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள் கிறேன்.

கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் மக்கள் செல்வாக்குமிக்க அரசியல் தலைவர். அரசியல் வழியில் அவர் மீது விமர்சனம் கொண்டுள்ளவர்கள்கூட, அவரது தமிழ் ஆற்றலில் ஈர்ப்புக் கொண்டிருப்பர். அவ்வாறு அவருக்குத் தமிழ் வேர் உண்டு!

தமிழில் பன்முக ஆற்றல் கொண்டவர் அவர்! திரைக்கதை வசனம், சிறுகதை, புதினம், கவிதை, திரைப்படப் பாடல்கள், நாடகம், தொலைக்காட்சித் தொடர், சங்க இலக்கியம் சார்ந்த படைப்புகள், திருவள்ளுவப் பெருந்தகை மீது பற்றும் திருக்குறள் ஆற்றலும் என பன்முக ஆற்றல் கொண்டவர் கலைஞர்! இவற்றில் காலத்திற்கேற்ப தம்மை புதுப்பித்துக் கொண்டவர்.

அரசியல் போராட்டங்கள், கூட்டுப் போராட்டங்கள், உட்கட்சி சிக்கல்கள் என கடுமையான அன்றாடப் பணிகளுக்கிடையே மேற்கண்ட கலை இலக்கியச் சாதனைகளை அவர் நிகழ்த்தியுள்ளார். அரசியலில் அவரின் நினைவாற்றல் வியக்கத்தக்கது!

வர்ணசாதி ஆதிக்கங்கள் நிறைந்திருந்த தமிழ் நாட்டு அரசியலில் சாதாரணக் குடும்பப் பின்னணியில் வந்த கலைஞர் கருணாநிதி, தமிழ் மக்களின் செல்வாக்குப் பெற்ற பெரும் தலைவராக நிலைத்தது பெரும் சாதனையாகும்!

# என் தோழர் திருமா வாழ்த்தப்படவேண்டும்

2020-2030 காலக்கட்டம் தமிழகத்தில் பல அரசியல் - சமூக மடைமாற்றங்கள் நடந்தோறும் காலமாக இருக்கும் அதிகார அரசியலுக்கெல்லாம் அப்பால் தமிழகத்தின் மிக முக்கியமான முன் அணியும் அரசியல் உயர் ஆளுமை களாகவும் தலைவர்களாகவும் தோழர் திரு. தொல் திருமா வளவன், டாக்டர் அன்புமணி ராமதாஸ், திரு. வேல்முருகன் போன்றவர்கள் நிலைபெற்றிருப்பார்கள்.

இவர்களுள்ள தோழர் திருமா மிக முக்கியமானவர். விளிம்பு நிலை மக்களின் நம்பகத்தன்மை கொண்ட தலைவராக மிக நீண்ட இடைவெளிக்குப்பின் அவர் உருவாகி யிருக்கிறார். எனவே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், சாதி மனநிலைகள் கடந்து நாம் உயர்த்தவேண்டிய தலைவர் திருமா அவர்கள்.

ஆகஸ்ட் 17 அவருக்குப் பிறந்த நாள், அந்நாளில் லட்சம் பனைவிதைகள் நட்டு தன்னை வாழ்த்திட விடுதலைச் சிறுத்தைகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அந்த மகிழ்ச்சியான வெளிப்பாடே இந்தப் பதிவு வர்தா புயலில் சென்னை பல லட்சம் மரங்களை இழந்தது. அதனை ஈடுகட்ட இயக்கம் தொடங்கி கடந்த ஆண்டு மட்டுமே 63000 நன்கு வளர்ந்த மரங்கள் நட்டோம். ஆனால் சென்னையின் தண்ணீர் தட்டுப்பாட்டை மரங்களின் பக்கமாய் நின்று எப்படி அணுகுவது என்ற தேடலில் கண்டெடுத்ததுதான் பனை மரமும் அதனையொட்டி நாங்கள் உருவாக்கிய பனைநாடு இயக்கமும், பனைமரம் நீண்ட நாள் வாழும், தனக்கான நீரை தானே தேடிக்கொள்ளும்.

மிக முக்கியமாக மழைநீரை நிலத்தடி நீர் படுக்கைக்கு கொண்டு சேர்க்கும். பல்வகை உணவு தரும், பேரிடர்களின் அழிவாற்றலை மட்டுப்படுத்தும் - இப்படி இன்னும் பல. இப்படியொரு மரத்தை தன் பிறந்த நாளிற்கான மையச் செயலாய் மாற்றிய தோழரின் நற்செயல் நம் அனைவராலும் போற்றப்படவேண்டிய ஒன்றாகும். நிலம், நீர், கடல், மலை இவற்றைக் காப்பது தான் இன்று இனத்திற்கான முதற்போர். தமிழகத்தின் நிலத்தடி நீர் பாதுகாப்புக்கும், பேரிடர் மட்டுப்படுத் தலுக்கும் பனைமரம் மிக முக்கியமானதென்பதால், அனைத்துக் கட்சிகளும் இயக்கங்களும் இதனை பெரி தாக எடுத்துச் செய்யலாம். ஆகஸ்ட் 17-ல் கூட எல்லோ ரும் இணையலாம். நல்லுணர்வு - நல்லுறவுச்செயலாகவும் இருக்கும். தமிழரின் தேசிய மரம் பனைமரம். பேரளவு நாம் அழித்து முடித்துவிட்ட இந்த அரு மரத்தின் மறுவரு கையை எல் லோரும் சேர்ந்து நிகழ்த்து வோம். தோழருக்கு வாழ்த் துகள்.பனைத் தோழமை தந்த மைக்கு பணிவான வணக்கங் கள் நலம் வாழ்க!



தமிழ்ப்பணி
**ம.ஜெகத்கஸ்பார்**, நிறுவனர்,
பனைநாடு இயக்கம்.



கோபம் கொடியது என்பதற்காக ஓர் அதிகாரமே பாடியுள்ள வள்ளுவப் பெருந்தகை, அதைவிடவும் கொடியது என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார், அது எது? அந்தக்குறள் இதோ

கோபத்தைவிடக் கொடியது அதிக மகிழ்ச்சியால் தோன்றும் விழிப்புணர்வின்மை (Unawareness)

*"இறந்த வெகுளியின் தீதே சிறந்த*
*உவகை மகிழ்ச்சியிற் சோர்வு"*
*( குறள் 531 அதிகாரம் 54 பொச்சாவாமை)*

ஒருவன் தனக்கென்று ஒரு நிலையான தொழில், நிறைவான வருவாய், உண்ண, உடுக்க, இருக்க, இன்பம் துய்க்க வசதிகள் கிடைத்தவுடன் தன்மொழி, இனம், நாடு, பொருளாதாரநிலை, கலை, இலக்கியம், பண்பாடு, சுற்றுப்புறத்தூய்மை, இயற்கைவளம் போன்ற எந்த ஒரு பொதுப்பிரச்சினை குறித்தும் கவலையின்றி வீட்டிக்குள் ஒடுங்கிக்கொள்ளும் செயலிழந்த நிலையே விழிப்புணர்வற்ற நிலை. நம் நாட்டைப் பொறுத்தவரை பெரும் பாலான நடுத்தரமக்கள் அந்த நிலையில்தான் இருக்கிறார்கள்.

வேலைக்காக அலைவார்கள், வேலை கிடைத்த வுடன் சம்பளம், பஞ்சப்படி, பதவி உயர்வு, மாறுதல் முன்பணம், கடன்பெறல் பற்றி பேசுவது தவிர வேறு எது குறித்தும் அவர்கள் பொறுப்புணர்வுடன் பேசுவதைக் கேட்க முடியாது. அதற்குமேல் போனால், இருக்கவே இருக்கிறது. திரைப்படம், சீட்டாட்டம், தொலைக்காட்சி, குதிரைப்பந்தயம் போன்ற பிற பொழுதுபோக்கு வாய்ப்புகள்.

தன்னளவிற்கு அடிப்படைத் தேவைகளில் நிறைவு கண்டவர்கள், பொதுநல விழிப்புணர்வு கொள்ள வேண்டும். சமுதாயத்தின் பல பொறுப்புகளில் தனக்கு ஆர்வமுள்ள ஏதேனும் ஒருபொறுப்பை ஏற்று, தன்னால் இயன்ற உதவியை, உழைப்பை, அதற்காக நல்க வேண்டும் என வற்புறுத்துவதே, இந்த பொச்சாவாமை 54வது அதிகாரத்தின் நோக்கம்.

நம் வாழ்விற்கும், ஒரு தெருநாயின் வாழ்விற்கும் வேறுபாடு வேண்டாமா? மரங்களை வெட்டி காடுகளை அழிப்பதால் நிலம் மலடாகிக் கொண்டு வருகிறது. தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் ஆறுகளும், கடலும் நஞ்சாகி மீன்கள் கருவழிந்து வருகின்றன. காற்றுமண்டலத்தில் உயிர்வளி (oxygen) இருப்பு குறையும் வகையில் நம் அணுவாற்றல் சோதனைகள், போர்கள், தொழிற்சாலை மற்றும் பெருநகர்க்கழிவுகள் மலிந்து வருகின்றன.

இவைபற்றியெல்லாம் கடுகளவும் விழிப்புணர் வின்றி நம் செல்வந்தர்கள்...

கரன் சிநோட்டுக்களையும், தங்கக்கட்டிகளையும், தங்கள் சந்ததிக்குச் சேர்த்து வைப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றனர். இந்த உருபா தாள் களையும், தங்கக்கட்டிகளையும் கடித்துத் தின்று இவர்களின் சந்ததிகள் உயிர்வாழ முடியுமா? எப்படியும் நிலத்தில் விளையும் தானியங்கள், காய்கனிகள் போன்றவைகளை உண்டும், ஆறு, கடலில் வாழும் மீன்களைச் சுவைத்தும், தண்ணீரைக் குடித்தும் காற்றிலுள்ள உயிர்வளியை உட்கொண்டும் தானே உயிர் வாழமுடியும்? எனவே, சமுதாயத்தின் இதுபோன்ற பல்வேறு பொதுப்பிரச்சினை குறித்துச் சிந்திப்பதே விழிப்புணர்வாம்.

வான்புகழ் வள்ளுவனுக்கு வாழ்த்துக்கூறுவோம்! வாழ்வில் வளம்பெறுவோம்!! வணக்கம்.

# கோபத்தை விடவும்
## கொடியது விழிப்புணர்வின்மை!

அன்புடன்,

**பீமபெருமாள்,**
அண்ணா நகர்த்தமிழ்ச்சங்கம்,
அண்ணாநகர், சென்னை 600 040.
பேசி: 9500930460

# மதுரை பெண்விமானி

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள ஜக்கூரில் அரசு விமான ஓட்டுனர் பயிற்சி பள்ளி உள்ளது. இந்த பள்ளி 1997ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டது. 2013ஆம் ஆண்டு மீண்டும் விமான ஓட்டுனர் பயிற்சி பள்ளி திறக்கப்பட்ட உடன், முதல் பேட்ஜ்ல் மதுரையைச் சேர்ந்த அரசு பஸ் டிரைவர் ரவிக்குமார் என்பவரின் மகளான காவியா (வயது 23) விமானத்தை இயக்குவதற்கான பயிற்சி பெறுவதற்காக சேர்ந்தார்.

கட்டணம் அதிகமாக இருந்ததால், ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்த காவியா முறையாக பயிற்சி பெறமுடியாத சூழல் இருந்தது. இதையடுத்து 2015ஆம் ஆண்டு மத்திய அரசின் உதவித்தொகைக்கு விண்ணப்பம் செய்தார். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் காவியாவுக்கு மத்திய அரசின் உதவித்தொகை மூலம் விமானம் இயக்குவதற்கான பயிற்சியை தடையின்றி தொடருவதற்கான வாய்ப்பு கிட்டியது.

மத்திய அரசின் உதவித்தொகை திட்டத்தின் கீழ், குறிப்பிடத்தகுந்த கல்வி நிலையங்களில் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் இலவசமாகவும், தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.2 லட்சமும் வழங்கப்படுகிறது. மேலும் பயணிகள் விமானத்தை இயக்குவதற்காக தனியார் துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ரூ.272 லட்சம் உதவித்தொகையாக ஆண்டுக்கு வழங்கப்படுகிறது.

இதுதவிர மாதாந்திர செலவுகளுக்காக ரூ.2 ஆயிரத்து 220. நோட்டு, புத்தகங்கள் வாங்குவதற்காக வருடத்துக்கு ரூ.3 ஆயிரம், நவீன வசதி உடைய கம்ப்யூட்டர் மற்றும் ஒருமுறை உதவியாக ரூ.45 ஆயிரம் ஆகியவையும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் கடந்த 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமல்படுத்தப்பட்டது. அதனைதொடர்ந்து 2012ஆம் ஆண்டு இந்த திட்டம் மாற்றியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் படித்த காவியா ரூ.20 லட்சம் உதவி பெற்று, ஜக்கூர் அரசு விமான ஓட்டுனர் பயிற்சி பள்ளியில் 21 வருடத்துக்கு பின்னர் (1997ஆம் ஆண்டு கடைசியாக



உரிமம் வழங்கப்பட்டது) பயணிகள் விமானத்தை இயக்குவதற்கான உரிமம் பெற்று வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளார். இந்தப் பயிற்சிக்கு இடையே, விமான ரேடியோ தொலைபேசி ஆபரேட்டர் உரிமமும் காவியா பெற்றுள்ளார்.

இதுகுறித்து அரசு விமான பயிற்சி பள்ளியின் தலைமை பயிற்சியாளர் கமாண்டர் அமர்ஜித்சிங் டாங்கே கூறும்போது, விமான ஓட்டுனர் பயிற்சி பள்ளி மீண்டும் திறந்த பின்னர் பயணிகள் விமானத்தை இயக்குவதற்கான உரிமம் காவியாவுக்கு கிடைத்துள்ளது. இது பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. சிறந்த மாணவராக அவர் திகழ்ந்தார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்றார்.

உரிமம் பெற்றது குறித்து விமானி காவியா கூறியதாவது:

விமானி ஆகவேண்டும் என்பது என்னுடைய குழந்தைப் பருவ ஆசை மதுரையில் 12ஆம் வகுப்பு படித்த பின்னர். அரசு விமான பயிற்சி பள்ளியில் சேருவதற்கு விரும்பினேன். ஆனால், அதற்கான கட்டணம் ரூ.25 லட்சம் ஆகும். இதனை என்னுடைய குடும்பத்தால், ஏற்பாடு செய்ய இயலாது, இருந்த போதிலும் என்னுடைய பெற்றோர். கடுமையான கஷ்டத்துக்கு பின்னர் அங்கும், இங்குமாக ஓடி திரிந்து ரூ.6 லட்சம் கடன் வாங்கினார்கள்.

இதையடுத்து 2013ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் விமானம் இயக்குவதற்கான பயற்சியைத் தொடங்கினேன். ஒரு மணி நேர பயிற்சி ரூ. 10 ஆயிரம் என்பதால் என்னிடம் இருந்த பணத்தை வைத்து 46 மணி நேரமே பயிற்சி மேற்கொள்ளும் நிலை இருந்தது. நிதிப் பற்றாக்குறை காரணமாக 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் என்னுடைய பயிற்சி முழுவதுமாக தடைபட்டது. இதையடுத்து மத்திய அரசின் உதவித் தொகை திட்டத்தில் விண்ணப்பம் செய்தேன்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு உயர் வகுப்பு கல்விக்காக உதவும் மத்திய திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் உதவித்தொகை கிடைத்தது. இதன்மூலம் எனக்கு 200 மணி நேரம் விமான பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. மத்திய அரசு அளித்த உதவித்தொகை என்னுடைய கனவை மீட்டெடுத்தது.

உதவித்தொகை கிடைத்ததில் இருந்து என்னுடைய வாழ்க்கையை நான் பின்னோக்கி பார்த்தது இல்லை. விமானி ஆகவேண்டும் என்ற என்னுடைய வாழ்நாள் கனவு தற்போது நினைவாகியிருக்கிறது. பயணிகள் விமானத்தை இயக்குவதற்கான பணியில் சேருவதில் மிகுந்த ஆர்வம் இல்லை. விமான ஓட்டுனர் பயிற்சியாளராக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இவ்வாறு அவர் கூறினார்.

# சமூகத்துக்கு நல்லது செய்தவர்களைப் பாராட்டும் மனம் பெற வேண்டும்!

சமூக நோக்கத்தோடு கூடிய நல்ல செயல்களை எவர் செய்தாலும் பாராட்டும் மனப்பான்மை வேண்டும். இதில் எந்தவித வேறுபாடும் காட்டுதல் கூடாது!

அண்மையில் ஒரு நாளேட்டில் வாசகர் ஒருவர் ஒரு கருத்தைப் பதிவு செய்திருந்தார். அதாவது கலைஞர் கருணாநிதியைக் கடுமையான சொற்களால் விமர்சனம் செய்திருந்தார். அவர் கூறியது. பராசக்தி என்ற பழைய திரைப்படத்தில் கருணாநிதி எழுதிய வசனத்தில் காளி என்றைக்குடா வாய் திறந்து பேசினாள்...எனக்கூறி அதை நையாண்டி செய்துள்ளார். அவர் முழுவதுமாக அந்த வசனத்தைக் கூறவில்லை. ஒரு பகுதியை மட்டுமே விமர்சித்துள்ளார். அது சரியான முறையல்ல. அந்தத் திரைப்படத்தில் தொடர்ந்து கருணாநிதி கோவில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது என வசனம் எழுதியிருக்கிறார். இதை வசதியாக வாசகர் மறந்துவிட்டார்போலும்!

காஞ்சிபுரம் கோவில் கருவறையில் அர்ச்சகர் ஒருவர் கோவிலுக்கு வந்த பெண்ணுடன், குஜாலாக இருந்ததுடன் மட்டுமின்றி, அதைத் தன் மொபைல் போனில் படம் பிடித்திருக்கிறார். பத்திரிகைகளிலும் பரவலாக இதைப்பற்றி செய்தி வந்திருந்தது. இப்போது மனதிற்குள் இயற்கையாகவே ஒரு கேள்வி மக்கள், மனதிற்குள் எழுகிறது. அதாவது, கருவறைக்குள் இருந்த அம்பாள் ஆங்காரம் கொண்டு அர்ச்சகரின் செவிட்டில், நான்கு அறை கொடுத்தாளா... இல்லையே...அயோக்கியப்பயலே வெளியே போடா என வசனம் பேசினாளா. இல்லையே..

மேலும் கொடுக்க வேண்டிய நேரத்தில் தக்க தண்டனை யாவது கொடுத்தாளா...இல்லையே!

ஆகவே, தயவு செய்து சமூக நோக்கத்திற்காகப் பாடுபடும் எவரையும் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. அவர்களை இழிவுபடுத்தும் எண்ணத்தோடு செயல்படவேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான விண்ணப்பம், வேண்டுகோளும் ஆகும்....!

அன்புடன்,

**பீமபெருமாள்,**
அண்ணா நகர்த்தமிழ்ச்சங்கம்,
அண்ணாநகர், சென்னை 600 040.
பேசி: 9500930460

# இந்தியாவின் முதல் விடுதலை வீரர்

# மன்னர் வீர அழகுமுத்துக்கோன்

பெயர்:வீர.அழகு முத்துக் கோன், பிறப்பு : கி.பி. 1728, வீர மரணம் : கி.பி.1757, பெற்றோர் : மன்னர் அழகுமுத்துக்கோன், ராணி அழகுமுத்தம்மாள், குலம் : ஆயர் (யாதவர்), குடும்பப் பட் டங்கள் : வானரவீரர், வானாதி ராயர், மிலாடுடையர், சேர்வைக் காரர், பிறப்பிடம் : கட்டாலங் குளம் அரண்மனை, திருநெல் வேலி (தற்போது தூத்துக்குடி) தமிழ்நாடு, வகித்த பதவி : அரசர், முதல் விடுதலைப் போராட்ட வீரர்.

வீர அழகு முத்துக்கோன் கட்டாலங்குளம் சீமையின் அரசராக இருந்தவர். மன்னர் வீர அழகு முத்துக்கோனுக்கு ஜெகவீர ராமபாண்டிய எட்டப்பன் என்கிற எட்டயபுரம் மன்னர் சிறந்த நண்பராக விளங்கினார். இந்தியா வின் முதல் விடுதலை போர் 1857 என்று அறியப்படுகிறது. ஆனால் அதற்கு முன்பே இந்தியாவின் பல இடங்களில் போர் நடந்திருக் கின்றன. அவர்களுள் முதன்மை யானவர் மன்னர் வீர அழகு முத்துக்கோன்.

தந்தை மன்னர் அழகு முத்துக் கோன் 1725ஆம் ஆண்டு கட்டா லங்குளம் மன்னராக முடி சூட்டிக் கொண்டார். இவருக்கும் ராணி அழகு முத்தம்மாளுக்கும் 1728ஆம் ஆண்டு நமது விடுதலை வீரர் வீர அழகு முத்துக் கோன் பிறந்தார். 1729 ஆம் ஆண்டு தம்பி சின்ன அழகு முத்துக் கோன் பிறந்தார்.



1750ல் தந்தை மன்னர் அழகு முத்துக் கோன் அனுமந்தகுடி போரில் வீரமரணம் அடைந்தார். தந்தை இறந்த அதே ஆண்டு 1750ல் அண்ணன் வீர அழகு முத்துக்கோன் தன்னுடைய 22ம் வயதில் மன்னராக முடி சூட்டிக் கொண்டார்.

1755ல் அண்ணன் வீர அழகு முத்துக்கோன் தலைமையில் நடந்த

விடுதலை போரில் தம்பி சின்ன அழகு முத்துக்கோன் பெருமாள்கோயில் வாசலில் வைத்து சுடப்பட்டு வீரமரணம் அடைந்தார்.

முதன் முதலாக ஆங்கிலேயர்களை எதிர்த்தும், பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டுவதை தடுக்கவும் செய்தார் மன்னர் வீர அழகு முத்துக்கோன். இதனால் கோபமுற்ற ஆங்கிலேயே அமரசு பிரிட்டிஷ் ஜெனரல் முகம்மது யூசுப்கான் (கான் ஷாகெப்) தலைமையில் ஆங்கிலேயப் படைகளை அனுப்பி வைத்தது. மன்னர் வீர அழகு முத்துக் கோனுக்கும் முகம்மது யூசுப் கானுக்கும் (மருதநாயகம்) பெத்த நாயக்கனூர் கோட்டையில் போர் நடந்தது. மன்னர் வீர அழகு முத்துக்கோனின் குதிரை சுடப்பட்டது மற்றது அவரது வலது கால் சுடப்பட்டது. இருப்பினும் 3 மணி நேரம் போர் தொடர்ந்தது. இறுதியில் மன்னர் வீர அழகு முத்துக் கோனும் அவருடைய 7 தளபதிகள் மற்றும் 248 போர் வீரர் களும் இரும்பு சங்கிலியால் பிணைக்கப்பட்டு நடுக் காட்டூர் என்னும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பீரங்கி முன் நிறுத்தப்பட்டு வரி செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டனர். மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என்று கேட்டு மன்னர் வீர அழகு முத்துக்கோன் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார்.

பிறகு 248 வீரர்களின் வலது கரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன. பீரங்கி முன் நின்ற மன்னர் வீர அழகு முத்துக்கோனும் அவருடைய 9 தளபதிகள் கெச்சிலணன் கோனார். முத்தழகுக்கோனார், வெங்கடேஸ்வர எட்டுக்கோனார், ஜெகவீர ரெட்டுக் கோனார், முத்திருளன்கோனார், மயிலு பிள்ளை கோனார் மார்பில் சுடப்பட்டு வீர மரணம் அடைந்த னர்.


பீரங்கி முன் நின்று சாகும் தருவாயிலும் தன்னைச் சேர்ந்தவர்களை காட்டிக்கொடுக்க மாட்டேன் என்று கூறிய நெஞ்சுரம் மிக்கவர் மன்னர் வீர அழகு முத்துக்கோன் என்பது குறிப்பி டத்தக்கது. மன்னர் அழகு முத்துக்கோன் வம்சத்தில் எவரும் 40 வயதை கடப்பதற்கு முன்பே போர்களத்தில் வீரமரணம் அடைந்துள்ளனர். கட்டாலங்குளத்தை கடந்து செல்லும் எவரும் குதிரை, யானை, பல்லக்கில் அமர்ந்து செல்லக்கூடாது. காட்டாலங்குளம் சுற்றியுள்ள பாளையக்காரர்களை பதவி இறக்கும் அதிகாரத்தை திருமலைநாயக்கர் தாத்தா கிருஷ்ணப்பநாயக்கரிடம் இருந்து மன்னர் வீர அழகு முத்துக்கோன் முன்னோர்கள் பெற்றிருந்தனர். ஜெகவீரராமபாண்டிய எட்டப்பநாயக்கர் மகன் வெங்கடேஸ்வர எட்டப்ப நாயக்கருக்கு பெருநாழி காட்டில் மன்னர் வீர அழகு முத்துக்கோன் முடிசூட்டி வைத்தார்.

**சுபாஷ்சேர்வை யாதவ்**



# ஒப்புரவு அறிதல்

# திருவள்ளுவர் அளித்துள்ள விளக்கம்...!




திருக்குறளின் 22ஆவது அதிகாரம் இந்த ஒப்புரவு அறிதல். இதன் பொருளைப்பற்றி சிறிது சிந்திப்போம்.

ஒப்புரவு என்ற சொல்லுக்கு, உலகநடையை அறிந்து ஒழுகல் என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுகிறார்கள்.

ஆனால், வள்ளுவப்பெருந்தகை அதற்கு அளித்துள்ள பொருளோ கைம்மாறு வேண்டாக் கடப்பாடு என்பதாகும். பலனை எதிர்பாராது கடமைகளைச் செய்தல் என்றும் விரித்துக்கூறலாம்.

வடநூலார் இதை நிஷ்காமிய கர்மம் என்று மொழி பெயர்த்தனர். இந்த அதிகாரத்திற்கு அளிக்கப் பெற்றுள்ள விளக்கம்தான் கீதையின்சாரம். அதில் இதை சுதர்மம் என்ற சொல்லால் குறித்தனர்.

இந்த ஒப்புரவிற்கு அய்யன் திருவள்ளுவர் அருமையான எடுத்துக் காட்டுத் தருகிறார்.

“கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு“ (குறள் 211)

இதன்பொருள்:

நமது முயற்சியாலும், நமக்கு வாய்த்த நல்லூழின் பெரிய வலிமையாலும், நாம்பெற்ற செல்வத்தை நாம் மட்டும் துய்ப்பதுவே வாழ்க்கை, என்ற மயக்கத்தை நீக்கி, உலக நன்மைக்காக முடிந்த வழிகளிலெல்லாம் கைம்மாறு கருதாத பணிகளை ஆற்றவேண்டும் என்பதுவே இதன்பொருள்:

இன்று நாம் எளிதாய்த்துய்க்கும் ஒவ்வொரு பயனுக்கும், பின்னால், அதனைக் கண்டுபிடிப்பதற்காக வேண்டி உழைத்து உயிர்நீத்த நம்முன்னோரின் நீண்டவரலாறு ஒளிந்திருக்கிறது. அவர்களுக்கெல்லாம் நாம் என்னகைம்மாறு செய்ய முடியும்?

1. கொடிய வறுமையில் பட்டினி கிடந்து எல்லோரும் பசியின்றி வாழ்வதற்குரிய வழியை வகுத்தளித்துச் சென்றார். கார்ல்மார்க்ஸ், மூலதனம் என்ற அந்த அரிய நூலால் பயன்பெற்ற நாடுகள், இப்போது அவருக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்?

2. மின்விளக்கைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனுக்கும் தொலைபேசியை கண்டுபிடித்த கிரகாம்பெல்லுக்கும், நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

இதுபோல் அறிவியலிலும், மருத்துவத்திலும்,

*உலகியலிலும், மெய்யியலிலும் இன்னும் பல்வேறு துறைகளிலும் அளப்பரிய உண்மைகளைக் கண்டறிந்து இந்த உலகம் உயர்வடைவதற்காக, வழங்கிச் சென்ற மேதைகளுக்கு நாம் என்ன கைம்மாறு செய்துவிட முடியும்?*

*எனவே, அவர்கள் வகுத்தளித்த பயன்களைத் துய்க்கும் நாம், அப்படித் துய்ப்பதற்கு மட்டுமே பிறந்திருக்கிறோம் என்னும் தன்னல உணர்வைவிட்டு, உலக நலத்திற்காக வேண்டிய இயன்ற பணிகளையும் ஆற்றவேண்டும் என்பதுவே ஒப்புரவு அதிகாரம் கூறும் செய்தி.*

*குளிக்கும் நீரை ஒரு கீரைப்பாத்தியில் பாயவிட்டு குறைந்தபட்சம் ஒரு கைப்பிடிகீரை விளைவித்தால் அதுகூட ஒப்புரவுப்பணியே. பொருளை வாரிக் கொடுப்பதுதான் ஒப்புரவு என்பதில்லை. பொது நன்மைக்காக நாம் செய்யும் எந்தச் செயலும், சொல்லும், எழுத்தும் ஏன் நினைப்பும் கூட ஒப்புரவே.*

*பொருளால் ஒப்புரவு செய்யும்போது மட்டும், கையிருப்பைப் பார்த்துச் செய் என்று எச்சரிக்கிறார் வள்ளுவர் பெருமான், எனவே*

*"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை*

*வளவரை வல்லைக்கெடும்" (குறள் 480) என்று வலியறிதலில் (அதிகாரம் 48) கூறியது முரண் பாடாகாது இது பொருளைப் போற்றுவதற்காகச் செய்த எச்சரிக்கை மட்டுமே:*

*உலகம் உருண்டை என்று காட்டியதற்காகக் கலிலியோ கல்லால் அடிபட்டதும்....*

*மக்கள் மெய்யுணர்வில் கொண்டிருந்த தவறைச் சுட்டி, நல்வழிப்படுத்தியதற்காக இயேசுநாதர் சிலுவையில் அறையபட்டதும்....*

*நிறவெறி இனவெறிக்கு எதிராய்ப் போராடிய தற்காக ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி போன்றோர் துப்பாக்கிக்குண்டுகளைப் பரிசாய் ஏற்றதும்...*

*கடவுளின் பெயரால் மூடநம்பிக்கைகளை வளர்த்து மக்கள் ஏமாற்றப்படுவதை உணர்த்தியதற்காக, கல்லாலும், செருப்பாலும் அழுகிய முட்டையாலும் தந்தைபெரியார் தாக்கப்பட்டதும், ஒப்புரவினால் வரும் கேட்டை உயிரை வருத்தி அல்லது விற்றாவது பெற்றதற்குச் சில எடுத்துக்காட்டுகள்!*

*"ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்*

*விற்றுக்கோள் தக்க அடைத்து"*

*(குறள் 220)*

பதினெண் கீழ்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் முப்பால், உலகப்பொதுமறை என போற்றப்படும் திருக்குறளும் திகழ்கிறது. அறம், பொருள், இன்பம் என முப்பால்களாகிய இவை மூன்றும் இயல் எண்ணும் பகுதிகளாக பகுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இயலும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அதிகாரங்களைக் கொண்டதாகும். ஒவொரு அதிகாரமும் பத்து பாடல்கள் வீதம் 133 அதிகாரங்களுக்கு மொத்தம் 1330 குரல்களை தன்னுள் அடக்கியிருக்கிறது. இப்பாடல்கள் அனைத்தும் தொன்மையான குறள் வெண்பா வகையை சேர்ந்தவை ஆகும்.

இங்கே இந்நூலினுடைய மற்ற சிறப்புக்களை தொகுத்து வழங்கியுள்ளோம்.

திருக்குறள் முதல்முதலாக புத்தகமாக அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
திருக்குறளின் இயற்பெயர் முப்பால் ஆகும்.
இந்நூல் 'அ'கரத்தில் தொடங்கி 'கை'ரத்தில் முடிகிறது.
திருக்குறளில் உள்ள மொத்த சொற்கள் 14,000
திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42,194

தமிழ் எழுத்துக்கள் 247ல் 37 எழுத்துக்கள் மட்டும் திருக்குறள் நூலில் இடம்பெறவில்லை.
திருக்குறளில் அனிச்சம் மற்றும் குவளை என இருமலர்கள் இடம்பெற்றிருக்கின்றன.
திருக்குறளில் இடம்பெறும் ஒரே பலம் நெருஞ்சி
திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை குன்றிமணி
திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து 'ஔ'
திருக்குறளும் குறிப்பறிதல் பற்றி சொல்லபட்டுள்ளது.

திருக்குறளில் பனை மற்றும் மூங்கில் என 2 மரங்கள் இடம்பெற்றுள்ளன.
திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து 'னி'; மொத்தம் 1705 'னி'க்கள் உள்ளன.
திருக்குறளில் ஒரே ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட எழுத்து 'ங'
திருக்குறளில் இடம்பெறாத இரண்டு சொற்கள் தமிழ், கடவுள்
திருக்குறள் மூலத்தை முதல்முதலில் அச்சிட்டவர் தஞ்சை ஞானப்பிரகாசர்

திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் மணக்குடவர்
திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யூ. போப்
திருக்குறள் உரையாசிரியர்களுள் 10வது உரையாசிரியர்தான் பரிமேலழகர்
திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் 9
திருக்குறள் இதுவரை 27 மொழிகளில் வெளியாகியுள்ளது
இதுவரை திருக்குறளை 41 பேர் மொழி பெயர்த்துள்ளனர்
திருக்குறளானது நரிக்குறவர்கள் பேசும் வக்போலி மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

# அசாமில் வெளியார் கணக்கெடுப்பு தமிழ்நாட்டிலும் வேண்டும்!

அசாமில் வெளியாரை அடையாளம் கண்டு வெளியேற்றும் நடவடிக்கைக்காக அணியப்படுத்தப்பட்ட "தேசிய குடிமக்கள் பதிவேடு" (National Rigister of Citizens) இறுதி வரைவு 30.07.2018 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வரைவின்படி, ஏறத்தாழ 40 இலட்சம் பேர் "வெளியார்" என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் தவறு இருப்பதாகவோ, தவறாக விடுபட்டுள்ளதாகவோ கருதுபவர்கள் உரிய ஆவணங்களுடன் 2018 செப்டம்பர் 28-க்குள் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அசாமில் மண்ணின் மக்களான அசாமியர்களைவிட வங்காளிகள் மிகை எண்ணிக்கையினராக மாறிவிடும் ஆபத்து நேர்ந்தபோது, அசாம் மாணவர்களின் வெளியார் எதிர்ப்புப் போராட்டம் எழுந்தது.

அனைத்து அசாம் மாணவர்கள் சங்கம் முன்முயற்சியில், 1979ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் போராட்டம் மிகப்பெரும் மக்கள் கிளர்ச்சியாக வளர்ந்தது. இந்திய அரசு படை கொண்டு தாக்கியும், இடைவிடாத அடக்குமுறைகளை ஏவியும்கூட அப்போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை.

வேறு வழியின்றி, அன்றைய இராசீவ்காந்தி அரசாங்கம் போராடிய மாணவர் அமைப்பினருடன் 1985 ஆகத்து 15 அன்று உடன்பாடு கண்டது. இந்த "அசாம் உடன்பாடு" 1971 மார்ச் 24 – நள்ளிரவுக்குப் பிறகு அசாமுக்குள் குடியேறியோர் "வெளியார்" என வரையறுத்தது.

இந்த "வெளியாரை" அடையாளம் காண அசாம் முழுவதும் 100 "வெளியார் தீர்ப்பாயங்கள்" (Foreigners Tribunal) நிறுவப்பட்டு, பணி தொடங்கப்பட்டது. ஆனால், விரைவிலேயே இந்திய அரசு அப்பணிகளை கிடப்பில் போட்டது. காரணம் – வங்காளிகள் காங்கிரசுக் கட்சிக்கு வாக்கு வங்கிகளாக இருந்தனர்.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் ஆணையிட்டதன்பேரில் மார்ச் 2015இல் உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பில் இப்பணிகள் தொடர்ந்தன. பல்வேறு கால நீட்டிப்புகளுக்குப் பிறகு 2018 சூலை 30 – என்பதை இறுதிக் கெடுவாக உச்ச நீதிமன்றம் அறிவித்தது. இந்த இறுதிக் கெடு நாளான சூலை 30இல்தான், இந்த இறுதி வரைவு அளிக்கப்பட்டுள்ளது.

"வெளியார்" என்று அடையாளம் காணப்பட்டவர்களில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் மோடி அரசும், அசாம் மாநில பா.ச.க. அரசும் "வெளியார்" என்ற பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு, அவர்களை "அசாமியர்களாக" சட்ட விரோதமாக அடையாளப்படுத்த முயல்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இவ்வாறு நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உச்ச நீதிமன்றத்தின் கடமை!

அதேநேரம், "வெளியார்" என அடையாளம் காணப்பட்டுள்ள 40 இலட்சம் பேரை அவர்களது சொந்தப் பகுதியான வங்காளதேசத்திற்கோ, மேற்கு வங்காளத்திற்கோ உரிய முறையில் அனுப்பி வைப்பது இந்திய அரசின் கடமையாகும்!

இதே வெளியார் சிக்கல், தமிழ்நாட்டையும் கடுமையாக பாதித்து வருவதை தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறோம். கடந்த 2011ஆம் ஆண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பும், அதன் பிறகான நடப்புகளும் தமிழ்நாடு – அசாமைவிட மிகப்பெரும் வெளியார் ஆபத்தில் சிக்கியிருப்பதை எடுத்துக்காட்டுகிறது. (*காண்க : தமிழர் கண்ணோட்டம் 2018 சூலை 1-15 ஆசிரியவுரை*).

தமிழ்நாட்டில், 2001-க்கும் 2011-க்கும் இடையில் வங்காளிகளின் எண்ணிக்கை 160 விழுக்காடும், இந்தி பேசுவோரின் எண்ணிக்கை 107 விழுக்காடும் உயர்ந்திருக்கிறது.

இது தமிழர் தாயகத்தை கலப்பின மக்கள் வாழிடமாக மாற்றிவிடும்! தமிழர்களின் வேலை வாய்ப்பை – தொழில் வாய்ப்பை – மொழி வாய்ப்பைப் பறித்துவிடும்! தமிழ்நாட்டு அரசியலில் பா.ச.க.வும் அதற்கு அடுத்தநிலையில், பிற அனைத்திந்தியக் கட்சிகளும் கோலோச்சி தமிழையும், தமிழர்களையும் அவர்களுக்கான அரசியலையும் கீழ்ப்படுத்திவிடும்!

எனவேதான், வெளி மாநிலத்தவர் தமிழ்நாட்டிற்குள் வருவதை வரம்பு கட்டும் வகையில், "உள் அனுமதிச் சீட்டு முறை" (Inner Line Permit System) கொண்டு வர வேண்டும் என்றும், மொழிவழி மாநிலமாக தமிழ்நாடு உருவான 1956 நவம்பர் 1-க்குப் பிறகு தமிழ்நாட்டிற்குள் வந்தோரை "வெளியார்" என வரையறுத்து, அவர்களது மக்கள் தொகைக் கணக்கெடுப்பை மேற்கொண்டு, அவ்வாறு "வெளியார்" என்று அடையாளப்படுத்துவோரை படிப்படியாக வெளியேற்ற சட்டம் இயற்ற வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம்.

***– தமிழ்த்தேசிய தமிழர் கண்ணோட்டம்***



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**


அதிர்ஷ்டம் அடிக்கும்
ஆடி
தள்ளுபடி
5% முதல்
50% வரை
இணைந்திடுவீர் என்றும் எங்களின் ஆடைகளோடு...
Ph : 222280
பரவசமூட்டும் அனைத்து வித பள்ளிச் சீருடைகளை வாங்கிட அழைக்கிறது
உங்கள்
ராம் டெக்ஸ்டைல்ஸ் A/c
135, நேரு வீதி, திண்டிவனம்.

## சரளி கலைக்கூடம் பெருமையுடன் வழங்கும் 14-வது சலங்கை பூஜை விழா




29-07-2018 அன்று திண்டிவனம் JVS திருமணமண்டபத்தில் நடைபெற்ற சலங்கை பூஜை விழாவில் சிறப்பு விருந்தினர் திரைப்பட பின்னணி பாடகி B.S சசிரேகா அவர்கள் சலங்கை அணிந்துக் கொண்ட மாணவிகளுக்கு பொன்னாடை அணிவித்து சான்றுடன் நினைவு பரிசு வழங்கினார்.

## மாநில அளவிலான கராத்தே போட்டி சென்னையில் நடை பெற்றது
## இப்போட்டியில் திண்டிவனம் சரளி கலைக்கூடத்தின் மாணவர்கள் 1-இடம்



இப்போட்டியில் முதலாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டு
ரெஃப்ரியாகவும் செயல்பட்டு வந்த
சரளி கலைக்கூடத்தின் கராத்தே மாணவர்களுக்கு பாராட்டுகள்.